பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 08 | 24-08-94 | புதன்கிழமை | ஓசை 187

## எயிட்ஸ் நோயினால் நாளாந்தம் 500 பெண்கள் உயிரிழப்பு

எயிட்ஸ் நோயினால் பெண்கள் பாதிக்கப்படும் விதம் சமீப ஆண்டுகளில் அதிகரித்திருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. உலகிலுள்ள பெண்களில் சுமார் பதினையாயிரம் பேர் வாராந்தம் எச். ஐ. வி. வைரஸ் தொற்றிற்கு உள்ளாவதாகவும், அவர்களுள் நாளாந்தம் ஐந்நூறு பேர் வரை உயிரிழக்க நேரிடுவதாகவும் அவ்ஸ்தாபனம் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது. மேலும், இரண்டாயிரம் ஆண்டளவில் சுமார் எழுபத்தைந்து இலட்சம் ஆபிரிக்கப் பெண்களை (6ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி பகுதி கரையோரம் மீது ஒருமணிநேர கடும் பீரங்கித் தாக்குதல்

### மக்கள் மத்தியில் பெரும் பதற்றம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பிராந்தியத்தில் கடற்படையினர் மேற்கொண்ட அகோர பீரங்கித் தாக்குதலினால் ஒரு மணித்தியாலமாக அதிர்ந்தது. இத்தாக்குதலினால் கரையோரக் குடியிருப்புமக்கள் அல்லோல கல்லோலம் அடைந்தனர். சற்கோட்டையில் நடந்த தாக்குதலின் போது குடியிருப்புகள், ஆலயங்கள், பாடசாலைக் கட்டடங்கள் சிலவும், கரையில் கட்டிவிடப்பட்டிருந்தவள்ளங்கள் சிலவும் சேதத்திற்குள்ளாகின.

கடற்படை படகுகள் இரண்டு நேற்றுக் காலை 6.00 மணி முதல் கண்மூடித்தனமான முறையில் மாறிமாறித் தாக்குதலை நடத்தின. தொண்டமனாறுகுடாக்கடல் பகுதியிலும் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதி (6ஆம் பக்கம் பார்க்க)

## முதற்பெண் கரும்புலி நினைவு எழுச்சி நாட்கள்

### 26ஆம், 27ஆம் திகதிகளில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 16ஆம் திகதி அதிகாலை காங்கேசன்துறை துறைமுகத்தினுள் வெற்றிகரமான தாக்குதலை மேற்கொண்டு சிறிலங்கா கடற்படைக்கு பாரிய சேதத்தை விளைவித்த தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதலாவது பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி நினைவாக 26-ம் 27ஆம் திகதிகளில் வீர வணக்க எழுச்சி நாட்கள் ஏற்பாடாகியுள்ளன.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் சிறிலங்கா கடற்படையின் கடற்படைத்தளங்களில் ஒன்றான காங்கேசன்துறை துறைமுகத்தினுள் சென்று எம (6ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல்தீர்வு வரை இராணுவம் வடக்கு - கிழக்கில் நிலை கொள்ளும்

## வீடுபார்க்கச் சென்றவர் காயம்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி மற்றும் எறிகணை வீச்சுக்கு மாதனை பகுதியில் வீடுபார்க்க சென்ற ஒருவர் படுகாயமடைந்தார்.

இளையதம்பி பஞ்சலிங்கம் (வயது 48) என்பவரே இச்சம்பவத்தின் போது படுகாயமடைந்தவராவார்.

### பாராளுமன்ற ஆரம்ப கூட்டத்தொடர்

## ஜனாதிபதி விஜேதுங்கா கலந்துகொள்ளார்

(கொழும்பு)

சிறிலங்காவின் பாராளுமன்ற ஆரம்பக் கூட்டத் தொடரை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்க மாட்டார் என தெரியவருகிறது.

ஐ. தே. கட்சி தோல்வியடைந்ததும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியதும் தெரிந்ததே.

நாளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆரம்ப கூட்டத்தொடர் ஆரம்பிக்கப் படவுள்ளது இந்நிகழ்வில்

## அவசரகாலச் சட்டமும் தொடரும் பத்திரிகையாளரிடம் புதிய பிரதமர்

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படும்வரை வடக்கு கிழக்கில் இராணுவம் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கும் என்றும அவசரகாலச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் சிறிலங்காவின் புதிய பிரதம மந்திரி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது குறிப்பிட்டார்.

## புதிய சபாநாயகராக கே. பி. ரட்னாயக்கா

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய பாராளுமன்றத்திற்கு புதிய சபாநாயகராக கே. பி. ரட்னாயக்காவை ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி தெரிவு செய்துள்ளது

பதினாறாம் திகதி நடைபெற்ற தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட புதிய பாராளுமன்றத்திற்கான கூட்டத் தொடரில் சபாநாயகராக கே. பி. ரட்னாயக்கா தெரிவு செய்யப்பட இருப்பதாகவும் இவரின் பெயரை ஆளும் கட்சி உறுப்பினர்களில் ஒருவர் பிரேரிப்பார் எனவும்தெரிவந்துள்ளது

(கொழும்பு)

சிறிலங்காவின் பாராளுமன்ற ஆரம்பக் கூட்டத் தொடரை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கமாட்டார் என தெரியவருகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐ தே கட்சி தோல்வியடைந்ததும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியதும் தெரிந்ததே.

நாளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆரம்ப கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படவுள்ளது இந்நிகழ்வில் சிறிலங்காவின் ஜனாதிபதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. தோல்வியே டி. பி. முடிவிற்கு காரணம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி அமைத்த பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் தோல்வியடைந்ததே ஜனாதிபதி ஆரம்ப பாராளுமன்ற தொடரில் கலந்து கொள்ளாமைக்கு காரணம் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைத் திட்டத்தை ஐ தே, கவைச் சேர்ந்த ஜனாதிபதி வாசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலேயே இவ்வாறு ஜனாதிபதி முடி

(6ஆம் பக்கம் பார்க்க)

## முதல் அமர்வில் ஜனாதிபதி உரையாற்றுவது அவசியம்

### அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

புதிய பாராளுமன்ற ஆரம்பக் கூட்டத் தொடரில் கொள்கை விளக்க உரையை வாசிக்க வேண்டியது ஜனாதிபதியின் கடமைகளில் ஒன்று எனவும் இதில் விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை எனவும் கொழும்பில் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சம்பிரதாயபூர்வ நிகழ்ச்சி எவையும் நடைபெறாது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் புதிய அரசாங்கத்தின் ஆரம்ப பாராளுமன்ற கூட்ட தொடர் சம்பிரதாய பூர்வமான நிகழ்ச்சிகள் நடைபெறமாட்டாது என பாராளுமன்ற செயலாளர் பேட்டம் திக்வெல்ல விசேட செய்தி மூலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 25ஆம் திகதி புதிய அரசாங்கத்தின் முதலாவது

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி விஜேதுங்கா ஒரு முடமான வாத்து

### - பேராசிரியர் உயங்கொட

(கொழும்பு)

ஜனாதிபதி விஜேதுங்கா தற்போது தனது முழுமையான அதிகாரத்தை பிரயோகிக்க முடியாத ஒரு முடமான வாத்து என கொழும்பில் அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்; எதிர்க்கட்சி அரசமைத்ததேஇதற்கு காரணம் என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஐ. தே. கவில் விஜேதுங்காவின் ஆதரவுகுறைந்து வருகிறது என்றும்ஜனாதிபதித்தேர்தலில் இவர் தோல்வி அடைய

(6ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படும்வரை வடக்கு கிழக்கில் இராணுவம் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கும் என்றும் அவசரகாலச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் சிறிலங்காவின் புதிய பிரதம மந்திரி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கில் உள்ள பிரச்சினை பற்றி கருத்து வெளியிட்ட அவர், இனப்பிரச்சினைக்கு ''அரசியல் தீர்வு காணப்படும்வரை பாதுகாப்புப்படைகள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டிருக்கும். நாம் யுத்தத்தை இலாபகரமான வர்த்தகமாக கருத மாட்டோம். அரசியல் தீர்வு காணப்பட்டதும் பாதுகாப்புப் படையினர் தங்களது சொந்த இடத்துச்கு திருப்பி அழைக்கப்படுவார்கள். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்படும்'' எனத் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாடொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். ஒரு மாத காலத்திற்கு மட்டுமே அவசரகாலச் சட்டம் நாடெங்கிலும் அமுலில் இருக்கும். அடுத்தமாதம் அவசரகாலச் சட்டம் தொடர்ந்து அமுலாக்க இணக்கம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. சார்பு பொலிஸ் அதிகாரிகள் விரைவில் இடமாற்றம் பெறுவர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாக தொடர்ந்து செயல்படும் பொலிஸ் அதிகாரிகளை உடவடியாக இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களுக்குக் கோபமூட்டி அவர்களை வன்முறையாளர்களாக மாற்றும் முயற்சியில் சில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் முதல் உயர் அதிகாரிகள்வரை தீவிரம் காட்டி வருவதைத் தொடர்ந்தே இந்த இடமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பொ. ஐ மு. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இத்தகைய அதிகாரிகளை தொடர்ந்தும் ஒரே இடத்தில் சேவையாற்ற அனுமதிப்பது சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யுத்தநிறுத்தத்தை அறிவித்து புலிகளுடன் பேச்சை தொடங்குக

### புதிய அரசிடம் பரராஜசிங்கம் கோரிக்கை

(கொழும்பு)

புதிய அரசாங்கம், தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி, யுத்தநிறுத்தத்தை அறிவித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நிபந்தனையற்ற முறையில் உடனடியாக ஆரம்பிக்கவேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு, ஜனநாயக ரீதியில் ஆக்கபூர்வமான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவோம். கடந்த காலங்களாக தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கிவந்த அகதி வாழ்க்கைக்கும், துன்ப வேதனைகளுக்கும் உடனடியாக முடிவு கட்டப்பட வேண்டும் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை தீர்க்கக்கூடிய தீர்வுகளை புதிய பிரதமர் முன்வைப்பார் என நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இருபடைபலி

(கொழும்பு)

குச்சவெளி பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட ஆறாம் கட்டைப் பகுதியில் பொறிவெடியில் சிக்கிய இரண்டு பொலிசார் உயிர் இழந்துள்ளனர்.

## படகுச்சேவை இன்று இல்லை

வழமையாக நடைபெறும் கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று நடைபெறமாட்டாதென அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய பாராளுமன்றத்திற்கு புதிய சபாநாயகராக கே. பி. ரட்ணாயக்காவை ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவு செய்துள்ளது

பதினாறாம் திகதி நடைபெற்ற தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட புதிய பாராளுமன்றத்திற்கான கூட்டத் தொடரில் சபாநாயகராக கே. பி. ரட்னாயக்கா தெரிவு செய்யப்பட இருப்பதாகவும் இவரின் பெயரை ஆளும் கட்சி உறுப்பினர்களில் ஒருவர் பிரேரிப்பார் எனவும்தெரிவந்துள்ளது

சிறிலங்கா மக்கள் தொடர்பு சாதன

## பல பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ராஜினாமா

ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், அரச அச்சக கூட்டுத்தாபனம் ஐ. ரி. என் தொலைக்காட்சி சேவை என்பவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்பதவியை இராஜினாமா செய்துள்ளனர்

இந் நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளை இராஜினாமா செய்யுமாறு தகவல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 1500 ரூபா உதவித் திட்டம் 3 மாதத்தில் ஆரம்பமாகும்

### - பிரதமர் சந்திரிகா

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டவாறு, வேலையற்ற இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலை கிடைக்கும் வரை, மாதாந்தம் 1500 ரூபா வழங்கும் திட்டம் இன்னும் மூன்று மாத காலத்துள் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்,

வேலையற்ற இளைஞர் தொடர்பாக புள்ளிவிபரங்களைச் சேகரிக்கும் பணிகள் பிரதேச செயலாளர் மட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக பாடநெறி மறுசீரமைக்கப்படும்

### புதிய கல்வி, உயர்கல்வி அமைச்சர்

(கொழும்பு)

பல்கலைக்கழகத்தின் சில பாடநெறிகள் மறுசீரமைக்கப்படும் எனவும் சில புதிய பாடநெறிகள் அமுல்செய்யப்படும் எனவும் கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

நேற்று உயர் கல்வி அமைச்சில் தமது பதவியை பொறுப்பேற்ற அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் பாட

(6ஆம் பக்கம் பார்க்க)

## விசர்நாய்க்கடி தடுப்பூசி ஏற்றியும் சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

தடுப்பூசி ஏற்றிய பின்பும் விசர்நாய்க் கடிக்கு இலக்கான சிறுவன் ஒருவன் உயிரிழந்த பரிதாபசம்பவம் ஒன்று நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் நிகழ்ந்துள்ளது.

இவ்வாறு பரிதாப மரணத்தை தழுவிக் கொண்டவர் தாழையடி உடுத்துறையைச் சேர்ந்த கலைஅமுதன் (வயது 9) எனத் தெரியவந்துள்ளது.

இச்சிறுவன் விசர்நாய்க்கடி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஜெயா அழகு மாடம்**

விற்பனை அகமும் காட்சி அகமும் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு வடக்கு வீதியில் அமைந்துள்ளது என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத் தருகிறோம். (சி-10159)

**வெளிவந்து விட்டது!**

ஆண்டு 11 ற்கான துரித மீட்டல் வினாவிடை வெளிவந்து விட்டது. ஆக்கம்: க. சந்திரசேகரம் ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகசாலை 235, காங்கேசன் துறை சாலை, யாழ்ப்பாணம் (9176)

அராலியூர்
**ந. சுந்தரப்பிள்ளையின்**

அக்கரைச் சீமையில், ஆசிரியரது 45 வருட கால இலக்கிய அனுபவத்தில் பிறந்தது வாசித்தால் உண்மைக் கதை போலிருக்கும் இங்கிலாந்து போய் வந்த உணர்வு ஏற்படும் எங்கும் கிடைக்கும் (9183)

**விவசாயிகளுக்கு உர விநியோகம்**

(யாழ்ப்பாணம்)

வட்டு தென் மேற்கு சங்கானை பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நன்மை அளிக்கும் வகையில் அப்பகுதியில் இயங்கும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வட்டுக்கோட்டை பகுதியில் ஓர் களஞ்சியத்தை திறந்து அதன் மூலம் விவசாயிகளுக்கு உரம் மற்றும் மரக்கறி விதைகளை விநியோகித்து வருகிறது.

இங்கு நெல்லுக்கு தேவையான அடிக்கட்டுஉரம் வி. ஐ. மேற்கட்டு உரம் ஏ. எஸ் போன்றவையும் மற்றும் தேவையான மரக்கறி விதைகளும் விநியோகிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கடற்றொழிலாளர் கூ. சங்கம் அமைப்பு**

## பொது எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க மாகாண சேவையில் பொது எழுதுநர் சேவையின் ii ம் வகுப்பின் 'அ' பிரிவிற்கு நியமிப்பதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 31-ம் திகதியாகும்.

மூன்று வருடங்கள் சேவையாற்றியவர்கள் நியமனம் உறுதிப்படுத்தப்படாது விட்டாலும் உறுதிப்படுத்துவதற்கான தகைமை இருப்பின் விண்ணப்பிக்க முடியுமெனவும், போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பின் இப்பரீட்சை எதிர்வரும் நவம்பர் 5-ம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்படும் என்றும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக் குறிப்பில் மேலும் தெரிவிக்கையில், இதற்கான விண்ணப்பங்கள் கடந்த மாதம்21-ம்திகதிவெளியான அரசாங்க வர்த்தமானி மூலம் கோரப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஆண்டு இப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட இருந்த போதும் யாழ் கல்வித்திணைக்கள அதிகாரிகளின்அசிரத்தை காரணமாக ரத்துச் செய்யப்பட்டது தெரிந்ததே. இம்முறையும் இந் நிலை ஏற்படாமல் தடுக்க யாழ் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நல்லினவிதைகளுக்கான உற்பத்திவிழாநடைபெற்றது

முல்லை மாவட்டம் கற்சிலை மடு சிறுதானியப் பண்ணையில் அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நல்லின விதை உற்பத்தி விழா நடாத்தப்பட்டது.

நிறுவன உதவி இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விவசாய போதனாசிரியர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், மற்றும் உற்பத்திக் குழு பிரதிநிதிகள் ஆகியோருடன் பெருமளவு விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் பயிர்ச் செய்கையில் உச்சவிளைவை பெற வேண்டுமாயின் தூய விதைகளை பயன்படுத்துவது அவசியமானது. எனவே எமக்குத் தேவையான தூயவிதைகளை நாமே உற்பத்தி செய்யவேண்டியுள்ளது. இதற்காக இத்தகைய திட்டங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிமுகப்படுத்தி வருகின்றது. இவ்வாறான திட்டத்தின் அடிப்படையிலேயே கற்சிலைமடுவிலுள்ள இப்பண்ணையில் எட்டு இன நிலக்கடலை வர்க்கங்களும், மற்றும் பயறு கௌபி என்பனவும் தூய விதைக்காக பயிரிடப்பட்டுள்ளன.

இப்பயிர்ச் செய்கையைப் பார்வையிட்டு விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்ய ஊக்கப்படுத்தும் நோக்கிலும் இவ் விதைகளை எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கிலுமே இவ் விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழில் பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை தையல், நூலக உதவியாளர், தச்சு வேலைகள், பொறிவலர், சைக்கிள் திருத்துதல், மோட்டார் சைக்கிள் திருத்துதல். எழுதுவினைஞர், தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, அச்சியந்திரம் சம்பந்தமான பயிற்சி, குழாய்கள் பொருத்துநர் என்பன போன்ற பயிற்சி நெறிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் வடக்கு - கிழக்கு தொழிற் பயிற்சி முகாமையாளர் சிவயோக சுந்தரத்தை, அல்லது சிரேஷ்ட பகுதிப் பரிசோதகர் ஜ. ஜி பொன்கலனை யாழ்ப்பாண கச்சேரியில் சந்திப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம் பயிலுனர்களுக்கு பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

**வந்தாறு மூலை**

## மலையக மக்கள் ஆதரவு எமக்கான அங்கீகாரம்

**-பெ. சந்திரசேகரன்**

(நுவரெலியா)

எமக்கு கிடைத்துள்ள வாக்குகள் மலையக மக்கள் முன்னணியின் கொள்கைக்கு மக்கள் அளித்துள்ள அங்கீகாரமாகும் என மேற்படி முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இன்று மலையகமெங்கும் ஏற்பட்டுள்ள புதிய நம்பிக்கை, எதிர்பார்ப்பு, அரசியல் மாற்றம் அனைத்தும் எமது எதிர்காலத்துக்கு நல்ல அடையாளமாக அமைய வேண்டும் என விரும்புகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வாக்காளரை ஆயுதத்துடன் வரவேற்ற பொலிசார்

**- கண்காணிப்புக் குழு புகார்**

(வவுனியா)

பொலிஸ் அதிகாரிகள் கையில் ஆயுதங்களுடனேயே வாக்காளர்களையும் சர்வதேச அவதானிகள் குழுவினரையும் வரவேற்றனர். என சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி நாம் வாக்களிப்பு நிலையத்தில் பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிபரிடம் புகார் செய்தோம். கண்காணிப்புக் குழு விஜயம் செய்த அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் புளொட்டின் தேர்தல் ஏஜென்டுகள் இருந்தனர். ஆனால் ஏனைய கட்சிகளின் ஏஜென்டுகள் எல்லா நேரமும் காணப்படவில்லை எனவும் அவர்கள் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு-கிழக்கு புனரமைப்பு உலக வங்கி புதிய திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போதைய யுத்தத்தால் அரசாங்க, தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதவிபரங்களை ஆராய்ந்து புனரமைப்பு செய்வதற்கான புதிய திட்டமொன்று உலக வங்கி உதவியுடன் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் மீளக் குடியமர்வுக்கும், இத்திட்டத்தின் கீழ் நிதியுதவியும் அளிக்கப்படும், தகவல்களை சேகரிப்பதற்கான பொறுப்பு வடக்கு-கிழக்குமாகாணத்தில் உள்ளஒவ்வொருதிணைக்களத் தலைவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## வீதிகள் திருத்தம்

வடமராட்சிப் பகுதியில் கரவெட்டி கிழக்கு தில்லையம்பலம் வீதி, உடுப்பிட்டி வடக்கு கம்பர் மலை வைரவர் கோவில் வீதி ஆகியன தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் இப் போக்குவரத்துப்பாதையில் இதுவரை இருந்த சிரமங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பட்டமளிப்பு

இணுவில்-அருள்மிகு நடுவிளாத்தி ஸ்ரீ ஞானபைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவகால தெய்வீகப் பேருரையாக தொடர்ந்து 12 தினங்கள் 'கந்தபுராண' தொடர் சொற்பொழிவாற்றிய காரைநகர் கம்பன் கழக அமைப்பாளரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியருமாகிய திரு. த. சிவகுமாரனுக்கு ''மதுர கதா ஸாகரம்' என்னும் கௌரவ விருதினை மேற்படி தேவஸ்தானம் சார்பாக இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந வீரமணி ஐயர் அவர்கள் வழங்கி கௌரவித்தார்

**பின் வருவோர் தேவை**

1. படம் வரைஞர்கள்
2. வரைபடங்களில் தரமாக எழுத்து எழுதக்கூடியவர்கள்.

(கையெழுத்து அழகாக அமைந்தவர்கள்)

## நினைவு கூருகின்றோம்...

**24. 08. 1994 .**

1986ம் ஆண்டு இதே தினத்தில் இந்தியாவில் பயிற்சி முகாமில் தவறுதலாக நடந்த துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த,

**பசில்** (வேலுப்பிள்ளை அருட்செல்வம் - சுப்பர்மடம் பருத்தித்துறை)

1988-ம் ஆண்டு உரும்பராயில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**எம். துரைராசா**

1990ம் ஆண்டு முல்லைத்தீவிற் சிறீலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கைலாஸ்** (கனகசபாபதி லோகேந்திரா - கச்சேரி ஒழுங்கை, அரியாலை - யாழ்.)

1992ம் ஆண்டு மணலாறு - அளம்பில் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் அன்பரசன் / அக்பர்** (திருச்செல்வம் சதீஸ்குமார் - முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

**2-ம்லெப். சுடர்** (கந்தசாமி கௌரீஸ்வரன் - காக்காச்சிவெட்டை - மண்டூர்)

1993ம் ஆண்டு மன்னார் - பூநகரிப் பகுதியிற் சிறீலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய.

**லெப். மணலேஸ்வரன்/மழலேஸ்** (சின்னட்டி விநாயகன் மாறாஇலுப்பை - நெடுங்கேணி)

**லெப். தமிழ்மறவன்/வீரபாண்டியன்** (மேகவண்ணன் பூசங்கர் - ஒலுமடு - மாங்குளம்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறீலங்கா படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10165)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:- 15. 06. 1944

அநியாய அழிப்பு:- 19. 08. 1989

திதி:- 24. 08. 1994

கடற்றொழிலாளர்

## கூ. சங்கம் அமைப்பு

(தொல்புரம்)

சமூக, பொருளாதார, கலாசார நலன்களை முன்னேற்றுவதும், வறிய மீனவர்கள் மத்தியில் சிக்கனச் சேமிப்பை அறிமுகப்படுத்தி, தன்னுதவியளித்து அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்குடனேயே, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

இவ்வாறு தொல்புரம் கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகள் அங்கீகரித்தலுக்கான விசேட பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிமேற்கு பிரதேச கூட்டுறவு அதிகாரி திரு. செ. கனகசபாபதி அவர்கள் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மீனவர்களின் அடிப்படை தேவைகளையும், உரிமைகளையும் இந்த கூட்டுறவுச் சங்கம் வகை செய்ய உதவுகிறது. இன்றைய கால கட்டத்தில் மீனவர்களுடைய தொழில் முயற்சிகள் மந்த நிலையில் காணப்படுவதற்கு தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளே காரணமாக அமைந்துள்ளது. இருந்தும் தமது வருவாயை ஊக்குவிக்க மீனவர்கள் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொல்புரம் அமெரிக்க மிசன் தமிழ்கலவன் பாடசாலை மண்டபத்தில் மேற்படி சங்கத்தலைவர் திரு க. கோபாலகிருஷ்ணர் தலைமையில் நடைபெற்ற இவ் விசேட பொதுக்கூட்டத்தில் தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் திரு சி. கீரன், தொல்புரம் மத்திய சனசமூக நிலையச் செயலாளர் திரு. கி. மகேந்திரம் ஆகியோரும் சிறப்பு பிரதிநிதிகளாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். (41)

ஊக்கப்படுத்தும் நோக்கிலும்

வந்தாறு மூலை

# காணாமற் போனோருக்கு நஷ்டஈடு வழங்குக

(மட்டக்களப்பு)

1990 செப்டம்பர் 5ம் திகதி அதிகாலையில் வந்தாறு மூலை பல்கலைக்கழக அகதி முகாமிலிருந்து இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமற் போன 158 பேரின் குடும்பத்தினருக்கு உரிய நஷ்டஈடு வழங்கி மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்குமாறு மனித உரிமைகள் பணிக்குழு அறிவித்துள்ளது

சுமார் 45000 பேர் பார்த்திருக்க இந்தக் கைது நடந்திருக்கிறது. வாழைச்சேனை தலைமைக் காரியாலய 8-பிரிகேட் என்ற பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினரே இதை நடத்தினர். பெண்கள் ஒரு பக்கமாகவும், ஆண்கள் ஒரு பக்கமாகவும் நிற்க வைக்கப்பட்டு பஸ்சில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.

விசாரணைகளின் பின் விடுவிக்கப்படுவர் என்று உறுதி வழங்கி நான்கு வருடங்களாகி விட்டது எனவும், மேற்படி பணிக்குழு தெரிவித்துள்ளது.

## மூலப் பொருள் வழங்கல்

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ள உற்பத்தி நிறுவனங்களுக்கு மூலப் பொருட்கள் பெற்று வழங்கப்பட்டு வருகின்றன

இந்நிலையில் ஏற்கனவே வழங்கப்பட்ட பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் முகாமைத்துவ, தொழில் நுட்ப ஆலோசனைகள் போன்ற ஒத்தாசைகளுடன் கடந்த இரு மாதங்களில் மட்டும் ரூபா 17 லட்சத்து 80ஆயிரம் பெறுமதியான உள்ளீடுகள் இலாப நோக்கின்றி வழங்கப்பட்டிருக்கின்றன.

எதிர் காலத்திலும் இவ்வாறு உள்ளீடுகள் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளும் தொழில் முயற்சியாளர்கள் இந்த நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

புத்தூர் கிழக்கு மத்திய சனசமூக நிலையமும், தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும் இணைந்து நடாத்தும் ராஜன் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி அண்மையில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விளையாட்டுப் போட்டி நிலைய விளையாட்டு மைதானத்தில் சட்ட அறிஞர் திரு. சி. சிவனேசன் தலைமையில் நடைபெற்ற போது பல பிரமுகர்கள் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். மழலைகளின் மகிழ்வுறும் இந்நிகழ்வினை அநேக மக்கள் கண்டுகளித்தனர். போட்டியில் பங்குபற்றி சாதனை படைத்த சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (41)

1. படம் வரைஞர்கள்
2. வரைபடங்களில் தரமாக எழுத்து எழுதக்கூடியவர்கள். (கையெழுத்து அழகாக அமைந்தவர்கள்)
3. சித்திரங்கள் வரையக் கூடியவர்கள்

மேற்படி வேலைகளில் தங்களுக்கு தகுதியானவற்றை குறிப்பிட்டு 05. 09. 94க்கு முன்னர் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்,

முகவரி:
விளம்பர இல:347
மே/பா ஈழநாதம், மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(9186)

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
1935. 5. 14

விண்ணில்
1989. 8. 18

### ஆறுமுகம் சுப்பிரமணியம்

[ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்]

திதி:- 24. 8. 1994

அன்பின் திருவுருவே பண்பின் உறைவிடமே பாசத்தின் இருப்பிடமே. குடும்பத்தின் ஒளி விளக்கே எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தந்தையே நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஆண்டுகள் ஐந்தாண்டுகள் பூர்த்தியாகி விட்டாலும் உங்கள் அன்புமுகம் மறையவே மறையாது. தங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

கே கே எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

(9188)



திதி:- 24. 08. 1994

### திரு. இராஜசிங்கம் கிளி

அன்பால், அறிவால், பண்பால்
எங்களையெல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வளர்மதி வாசா,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.


அன்பு மனைவி,
அருமை மகள்,
சகோதரர், மைத்துனர்.

(9187)

## நினைவஞ்சலி

6-ம் ஆண்டு — 2-ம் ஆண்டு





அலெக்சான்டர் ஆரோக்கியம் — தியோனிஸ் அலெக்சான்டர்

"உங்கள் உயிர் கிறீஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது நம்முடைய உயிராகிய கிறீஸ்து தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சிமையில் தோன்றுவீர்கள்."

(கொலோ. 3 : 3-4)

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்திலும் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்திலும் இன்று காலை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்

பருத்தித்துறை. (9181)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

க. பொ. த. உயர்தரப் பரீட்சை- 1994

# அளவையியலும் விஞ்ஞானமுறையும்

## பகுதி I

பரீட்சை வழிகாட்டி:-

பகுதி 1 இல் மூன்று பகுதிகள் பிரிக்கப்பட்டு 12 வினாக்கள் இடம் பெறுகின்றன. பரீட்சார்த்திகள் இவற்றில் ஒவ்வோர் பகுதியில் இருந்தும் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். தெரிவு வினாக்கள் பல இருப்பதால் ஒவ்வொரு வினாவையும் நன்கு வாசித்து திட்டமிட்டு ஐந்து வினாவை தெரிவு செய்வது சிறந்தது. மேலதிக வினாக்கள் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். மாணவர்கள் தெரிவு செய்யும் வினாவிலேயே அவர்களின் மொத்தப்புள்ளி தங்கி உள்ளது.

இனி ஒவ்வொரு பகுதியில் வரும் வினாக்களுக்கும் விடை அளிக்கும் முறைகளை புள்ளிகளுடன் நோக்குவோம்.

பகுதி 1 இல் குறியீட்டு அளவையியல் தொடர்பான நான்கு வினாக்கள் வருவது வழமை. இதில் மாணவர்கள் குறைந்ததுஒரு வினாவைவேனும்தெரிவு செய்ய வேண்டும். இதில் இடம் பெறும் ஒவ்வொரு வினாவையும் தெளிவாக ஆராய்வோம்.

வினா i

எடுகூற்றுக்களில் இருந்து முடிவை பெறுவதன் மூலம் வாதம் வாய்ப்பானது என காட்டுதல். இவ்வினாவுக்குரிய விடையில் பின்வரும் விடயம் இடம் பெற வேண்டும்:

★ சுருக்கத்திட்டம்
★ குறியீட்டுத்திட்டம்
★ பெறுகை முறை

இங்கு சுருக்கத் திட்டத்திற்கும் குறியீட்டாக்கத்திற்கும் 02 புள்ளியும், பெறுகை செய்கைக்கு 03 புள்ளியும் வழங்கப்படும். குறியீட்டுத் திட்டம் பிழை எனின் புள்ளி எதுவும் இல்லை.

பரீட்சார்த்திகளின் பயிற்சிக்காக 1-ம் வினாவில் சிலவற்றை நோக்குவோம்.

உ+ம் அவன் பகுத்தறிவுடையவனாயின் மனிதனை மதிப்பான். அவன் மனிதனை மதிப்பான் எனின் மூடனோ அல்லது மன நோயாளியோ அல்ல. ஆகவே அவன் பகுத்தறிவுள்ளவன் ஆயின் அவன் மூடனும் அல்ல மனநோயாளியும் அல்ல.

சுருக்கத் திட்டம்
P. அவன் பகுத்தறிவுடையவன்
Q. அவன் மனிதனை மதிப்பான்
R. அவன் மூடன்
S. அவன் மனநோயாளி

குறியீட்டு திட்டம்
(P -> Q) : [Q -> ∼ (RVS) ]
ஃ[P -> ( ∼R ∧ ∼S ]

பெறுகை முறை
1. P -> (∼R ∧ ∼S)
2. P நிப. பெறு. எடு.
3. ∼R
4. R தே. பெ. எ
5. (P -> Q) எடு. கூற்று
6. Q 2, 5 விதி. விதி.
7. [Q -> ∼ (RVS) ] எடு. கூற்று
8. ∼(RVS) 6.7 விதி. விதி.
9. (RVS) 4 கூ. விதி.
10. ∼S
11. S நே. பெ. எ
12. (P -> Q) எடு. கூ,
13. Q 2, 12 விதி. விதி.
14. [Q -> ∼ (RVS) ] எடு. கூற்று 2
15. ∼ (RVS) 13, 14 விதி. விதி.
16. (RVS) 11 கூ. விதி
17. (∼R ∧ ∼S) 3, 10 இ / விதி

பிறிதோர் உதாரணத்தை கவனிப்போம்.

★ எனக்கு யுத்த பயம் இல்லை அல்லது அயல் நேசக்கரம் உண்டு ஆயின் இணக்கம் ஏற்படும் ஆகவே ஒன்றில் இணக்கம் ஏற்படும் அல்லது எனக்கு யுத்தபயம் உண்டு.

சுருக்கத் திட்டம்
P. எனக்கு யுத்தபயம் உண்டு.
Q. அயல் நேசக்கரம் உண்டு.
R. இணக்கம் ஏற்படும்.

குறியீட்டுத் திட்டம்
[ (∼PVQ) -> R ] ஃ (RVP)

பெறுகைமுறை
காட்டுக (RVP)
1.
2. ∼ (RVP) நேர. பெ. எ
3. P
4. ∼P நேர. பெ. எ
5. (∼PVQ) 4 கூ. விதி.
6. [ (∼PVQ) -> R ] எடு. கூ. 1
7. R 5, 6 விதி. விதி.
8. (RVP) 7. கூ. விதி
9. ∼ (RVP) 2 மீ. விதி.
10. (RVP) 3 கூ. விதி

வினா 2

பின் வரும் வாதங்களை குறியீட்டில் அமைத்து உண்மை அட்டவணை நேரல் முறையில் அவற்றின் வாய்ப்பினை பரிசோதிக்குக.

இவ்வினாவிற்கு விடையளிக்கும் போது பின்வரும் விடயம் கருத்தில் கொள்ள வேண்டும்.

★ சுருக்கத் திட்டம்
★ குறியீட்டுத் திட்டம்
★ உண்மை அட்டவணையின் நேரல்முறை
★ வலிதானதா, வலிதற்றதா

இங்கு சுருக்கத் திட்டத்திற்கும் குறியீட்டுத் திட்டத்திற்கும் 02 புள்ளியும், நேரல்முறைக்கும் முடிவுக்கும் 03 புள்ளியும் வழங்கப்படும். குறியீட்டுத் திட்டம் பிழை எனின் புள்ளிகள் இல்லை.

சில வினாக்கள்

(உ+ம்) (1) அவன் கலைப்பிரிவில் அல்லது வர்த்தகப் பிரிவில் படித்தான். அவன் கலைப் பிரிவில் படித்தால் அளவையியல் பயில்வான். அவன் வர்த்தகப் பிரிவில் படித்தால் அளவையியல் பயில்வான். ஆகவே அவன் எவ்வாறாயினும் அளவையியல் பயில்வான்

★ சுருக்கத் திட்டம்
P அவன் கலைப் பிரிவில் படித்தான்
Q அவன் வர்த்தகப் பிரிவில் படித்தான்
R அவன் அளவையியல் பயில்வான்

★ குறியீட்டுத் திட்டம்
[ (P v Q) (P -> R) (Q -> R) ] ஃ R

★ உண்மை அட்டவணை நேரல்முறை
( [ (P v Q) ∧ (P -> R) ] ∧ (Q -> R)) -> R
FTF T F T F T FTF F F
முரண் ஃ வலிதான வாதம்

உ+ம் 2

பேராதனை அழகிய இடமாயின் அதனருகே மகாவலி ஓடுகின்றது. மகியங்கனை அழகிய இடமாயின் அதனருகில் மகாவலி ஓடுகிறது. ஒன்றில் பேராதனை அருகில் அல்லது மகியங்கனை அருகில் மகாவலி ஓடுகிறது. ஆகவே ஒன்றில் பேராதனை அல்லது மகியங்கனை அழகிய இடமாகும்.

சுருக்கத் திட்டம்
P பேராதனை அழகிய இடம்
Q பேராதனை அருகில் மகாவலி ஓடுகிறது
R மகியங்கனை அழகிய இடம்
S மகியங்கனை அருகில் மகாவலி ஓடுகிறது

குறியீட்டுத் திட்டம்
[(P -> Q) (R -> S) (QVS) ] ஃ (PVR)

உண்மை அட்டவணை நேரல் முறை
[ (p -> Q) ∧ (R -> S) ] ∧ (QVS) ] -> (pVR)
F T T T F T T T TTT F FFF
முரண் இல்லை ஃ வலிதற்ற வாதம்

வினா 3, 4

இவ்வினா பகுதியில் பல விடயம் வருவதுஉண்டு குறிப்பாக சில பகுதிகளை இங்கு நோக்கலாம்.

பகுதி (அ)

உண்மை அட்டவணை முறை பயன்படுத்தாது நற்சூத்திரங்களின் உண்மை பெறுமானங்களை ஆராய்தல் இவ்வினாவிற்கு விடை அளிக்கும்போது பின்வரும் விடயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

★ உண்மைப் பெறுமானங்கள் பயன்படுத்தலாகாது.
★ தேவையான படிமுறைகளை மட்டும் குறிப்பிட்டு நியாயம் காட்டுதல் வேண்டும்.

இங்கு உண்மை அட்டவணை வரைந்திருப்பின் அல்லது தேவையற்ற படிநிலை இருப்பின் புள்ளி வழங்கப்பட மாட்டாது.

உ+ம்

P உண்மை அல்ல எனின் பின்வரும் வாக்கியம் உண்மையானதா பொய்யானதா அல்லது தீர்மானிக்க முடியாததா என உண்மை அட்டவணை வரையாது கூறுவதுடன் நீர் இம்முடிவுக்கு வந்த விதத்தை இயன்றவரை சிக்கனத்துடன் தருக,

I) [ (p -> Q) v (P∧R) ]
II) [ (P∧Q) <-> (∼PVQ) ]

விடை

i) இவ்வாக்கியம் உண்மையானது

இங்கு P பொய் எனின் முடிவு மாறிலியான உறழ்வின் முற்கூற்றான (P -> Q) உண்மையானது ஆகவே இதன்படி முடிவு உண்மை,

ii) இவ்வாக்கியம் பொய்யானது.

இங்கு P பொய் எனின் முடிவு மாறிலியான இரட்டை உட்கிடையின் முற்கூற்றான (P∧Q) பொய்யாகும். ஆனால் பிற்கூற்றான (∼PVQ) உண்மையாகும். ஆகவே இரட்டை உட்கிடையின் முற்கூற்று பொய்யாகவும் பிற்கூற்று உண்மையாகவும் வருவதால் முடிவு பொய்.

பகுதி ஆ

பின்வரும் தேற்றங்களை பெறுகை முறையில் நிறுவுக.

i) ∼(P-> Q) -> p
ii) (p <-> Q) <-> (Q <-> p)

1. I) ∼(P -> Q) -> P காட்டுக
2. ∼(P -> Q) நிப. பெ. எ
3. P காட்டுக
4. ∼P நேர. பெ. எ
5. (P -> Q) காட்டுக.
6. P நி. பெ. எ
7. Q
8. ∼Q நேர. பெ. எ
9. P மீ. வி.
10. ∼P 4 மீ. வி.
11. (P -> Q) 5 மீ. வி.
12. ∼(P -> Q) 2 மீ. வி.

**S. சயந்தன் B. A. (CEY)**
ஆசிரியர்,
யா/மகாஜனாக்கல்லூரி, தெல்லிப்பழை.

II)
1. (P-> Q) <-> (Q <-> P)
2. (P <-> Q) -> (Q <-> P)
3. (P <-> Q) நிப. பெ. எ
4. (Q-> P) 3 இ. நி. வி
5. (P -> Q) 3 இ. நி. வி.
6. (Q <-> P) 4 . 5 நி. நி. இ . நி .விதி
7. (Q <-> P) -> (P <-> Q)
8. (Q -> P) நிப, பெ. எடு
9. (P-> Q) 8 இ. நி வி
10. (Q -> P) 8 இ. நி. வி
11. (P <-> Q) 9. 10 நி. நி இ.நி.விதி
12. (P <-> Q) <-> (Q <-> p) 2, 7 நி நி இ நி விதி

பகுதி இ

உண்மை அட்டவணையைப் பயன்படுத்தி சமன் முரண், இரண்டும் அல்லது குறியீட்டு வாக்கியங்களை இனம் காணுதல்.

பின்வரும் வினாவை கவனிக்க
1) (PVQ), (∼p -> Q)
ii) ∼ (P∧Q), ∼ ( ∼PV ∼Q)

விடையளிக்கும் முறை

| i p | Q | (PVQ) | <-> | (∼P -> Q) |
|---|---|---|---|---|
| T | T | TTT | T | F T T |
| T | F | TTF | T | F T F |
| F | T | FTT | T | T T T |
| F | F | FFF | T | T F F |

ஃ இவை சமன்


| ii) P | Q | (∼P∧Q) | <-> | ∼( ∼PV ∼Q) |
|---|---|---|---|---|
| T | T | F T T T | F | T F F F |
| T | F | T T F F | F | F F T T |
| F | T | T F F T | F | F T T F |
| F | F | T F F F | F | F T T T |

ஃ இவை முரண்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் A/L

## தமிழ் மொழியின் வேற்றுமை இலக்கணம்




நல்லவன்
ஏது - அறிவில் சிறந்தவன்
சிவம்.

இக்காலப்பிரயோகத்தில் இல், இன் உருபுகளோடு இருந்து. நின்று ஆகிய சொல்லுருபுகளும் ஐந்தாம் வேற்றுமைப் பொருளினை உணர்த்தி வருதல் காணப்படுகிறது.

ருள் பெற்றது.


'உடைய' என்ற சொல்லுருபு ஆறாம் வேற்றுமைக்கு உரியது.

உதாரணம்:-
அவனுடைய புத்தகம்
அவனுடைய புத்தகங்கள்.

உயிர்குறுகிய மூவிடப் பெயர்

# தமிழ் A/L

## மாணவர் அரங்கு



# தமிழ் மொழியின் வேற்றுமை இலக்கணம்

தமிழ்மொழியின் வேற்றுமை அமைப்புப் பற்றித் தமிழின் தொன்மையான மரபுவழி இலக்கண நூல்களான தொல்காப்பியமும் நன்னூலும் விரிவாக எடுத்துக் கூறுகின்றன. தொல்காப்பியர் சொல்லதிகாரத்திலே இவ் வேற்றுமை பற்றிய இலக்கணங்களுக்கு மூன்று இயல்களை ஒதுக்கி முக்கியத்துவம் செய்கின்றார். நன்னூலார் பெயரியலின் இறுதியில் இவ் வேற்றுமை பற்றிக் குறிப்பிடுகின்றார். பெயர்ச்சொற்கள் தான் வேற்றுமை உருபு ஏற்பன என்பதால் இவ்வாறு அமைத்துக்கொண்டார் போலும்.

தொல்காப்பியர் வேற்றுமை என்றால் என்ன என்று வரைவிலக்கணம் செய்யவில்லை.

''வேற்றுமைதாமே ஏழெனமொழிய''

என வேற்றுமையின் எண்ணிக்கையைக் கூறி; விளிவேற்றுமையையும் ஒன்றாகக் கூறின்வேற்றுமை எட்டாகும் என்கிறார்.

நன்னூலார் வேற்றுமைக்கு இலக்கணம் செய்கின்றார்.

ஏற்குமெவ்வகைப் பெயர்க்கு மீறாய்ப் பொருள் வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை

தம்மையேற்றுக் கோடற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்கட்கும் இறுதியாய் அப்பெயர்ப் பொருளை வேற்றுமைப்படுத்துவனவான வேற்றுமைகள் எட்டேயாம் என்கிறார்.

வேற்றுமைகளின் பெயர் முறைகளைத் தொல்காப்பியர்

'அவைதாம்
பெயர் ஐ ஒடுகு
இன் அதுகண் விளியென்னு மீற்ற'

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து இரண்டாகுவதே மூன்றாகுவதேஎனவேற்றுமைகளைக்கூறிச் செல்வார்.

வேற்றுமைப் பெயர் முறைகளைக்கூறவந்த நன்னூலார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளியென்றாகுமவற்றின் பெயர் முறை'

தொல்காப்பியர் முதலாவதாகச் சுட்டுவது எழுவாய் வேற்றுமையாகும்.

'அவற்றுள்
எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே'

எனக் கூறிய தொல்காப்பியர் அடுத்து வரும் சூத்திரத்தில் பெயர்ச்சொல் எழுவாயாக வருவது மட்டுமன்றிப் பயனிலையாகவும் வரும் என்கிறார்.

நன்னூலார் பின்வருமாறு சுட்டுகிறார்-

அவற்றுள் எழுவாயுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக் கொளல தன் பயனிலையே

எனச் சுட்டுகின்றார். பெயர்ச்சொல்வாக்கியத்தில் எழுவாயாகவரின் அதுவே முதலாம் வேற்றுமை. இதற்கு உருபிடைச்சொல் இல்லை. இதனைத் தமிழ் மொழியின் சிறப்பு என்பார். ரா. சீனிவாசன் (மொழியியல்) இவ் வேற்றுமை ஏற்கும் பெயர் திரிவடையாது. இத்திரிபில் பெயர்க்குப் பிறிதொரு குணம் பயனிலை கோடல் வினை, வினா, பெயர் ஆகியவற்றை முடிக்கும் சொற்களாய் ஏற்கும்.

உதாரணம்:

1) சிவகரன் வந்தான்
2) மகாலிங்க சிவம் யார்?
3) கிருபா என் தம்பி

முதலாம் வேற்றுமைக்கு வேற்றுமை உருபு இல்லை. எனினும் சொல்லுருபு உண்டு சொல்லுருபு என்பது பொருளுடைய சொல். முதலாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகளாவன பின்வருவாறு; ஆனவன், ஆவான் என்பவன், என்பது. என்பவை

வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து என்பன முதலாம் வேற்றுமைக்கு சு, அர், ஆர், ஆர்கள், கள், மார் முதலான உருபுகளைச் சுட்டுகின்றன. இதற்குக்காரணம் வடமொழி மரபுகளைப்பின்பற்றியமையே எனலாம் எமது மொழியைப் பொறுத்தவரை இந்த உருபுகள் பொருத்தமானவையல்ல ஆனால் எழுவாய் வேற்றுமைக்கு உருபுகள் உண்டா என்பது ஆய்வுக்குரிய விடயம்

பழந்தமிழ் இலக்கியங்களில் 'கொடியோர் நாவே;' 'நோம் என் நெஞ்சே; 'வில்லோன் காலனகழலே; 'யானே ஈண்டையேனே; என இம்மாதிரிப் பல இடங்களில் எழுவாயினை மேற்காட்டுவதுபோல அல்லது அழுத்தம் கொடுப்பது போல 'ஏ'காரம் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இரண்டாவதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவது 'ஐ' என்ற வேற்றுமையாகும். இதன்பொருள் செயப்படு பொருள் இயற்றப்படுவதும்; வேறுபடுக்கப்படுவதும்; எய்தப்படுவதுமெனச் செயப்படுபொருள் மூன்றாகும். அடுத்துவரும் நூற்பாவில் இவை வகாப்பு முதலாகச் சிதைப்பீறாகச் சொல்லப்பட்ட இருபத்தியெட்டுப் பொருளும் அவைபோல்வன பிறவுமாகிய அம்முதற் பொருள் மேல் வரும் என்று குறிப்பிடுகின்றார்.

நன்னூலார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''இரண்டாவதனுருபையேயதன் பொருள் ஆக்கலழித்தலடைவனீத்தல் ஒத்தலுடைமையாதியாகும்''

நன்னூலாரும் இரண்டாம் வேற்றுமை உருபாக 'ஐ' என்பதனைக் குறிப்பிட்டு அதன் பொருளான செயப்படுபொருள்; ஆக்கப்படுபொருள்; அழிக்கப்படுபொருள்; அடையப்படுபொருள்; துறக்கப்படுபொருள்; ஒக்கப்படுபொருள்; உடைமைப்பொருள் என ஆறுவகையாக அமைக்கப்படும் நிலையைக் காட்டுகின்றார்.

உதாரணம்:-

குடத்தைவனைந்தான் - ஆக்கல்
குடத்தை உடைத்தான் - அழித்தல்
வீட்டை அடைந்தான் - அடைதல்
மனைவியை விட்டான் - நீக்கல்
சிங்கத்தை ஒத்தவன் - ஒத்தல்
வறுமையை உடையவன் - உடைமை

மூன்றாவதாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் 'ஒடு' என்ற வேற்றுமையாகும்.

''மூன்றாகுவதே
ஒடுவெனப் பெயரியவேற்றுமைக்கிளவி வினைமுதல் கருவி அனைமுதற்றதுவே''

வினை முதல், கருவி ஆகிய இரண்டு முதலையும் பொருளாக உடைத்து என்கிறார்.

நன்னூலார் மூன்றாம் வேற்றுமையில் தொல்காப்பியருடன் வேறுபடுகின்றார்.

மூன்றாவதனுருபாலானோடொடு கருவி கருத்தாவுடனிகழ்வதன் பொருள்''

நன்னூலார் 'ஒடு' என்பதனுடன் ஆல், ஆன் என்னும் உருபுகளையும் சேர்த்துச் சொல்லுகின்றார். பொருளாக; கருவி, கருத்தா உடனிகழ்ச்சி முதலானவற்றைச் சுட்டுகின்றார்.

நான்காவதாகத் தொல்காப்பியர் 'கு' என்ற வேற்றுமையைக் குறிப்பிடுகின்றார். நான்காம் வேற்றுமையானது எப்பொருளாயினும் கொள்ளுமென்றாலும் கோடற்பொருளே சிறந்தது எனச் சேனாவரையர் குறிப்பிடுகின்றார். நன்னூலாரும் நான்காம் வேற்றுமை உருபாக 'கு' என்பதனைக் கொள்வதுடன். அதன் பொருளாகக் கொடை, பகை, நேர்ச்சி, தகவும் அதுவாதலும்: பொருட்டும், முறையும் முதலானவற்றைச் சுட்டுகின்றார்.

உதாரணம் =

கொடை - புலவர்க்குப் பொன் கொடுத்தான்.
பகை - பிணிக்கு மருந்து பகை
நட்பு - இராமனுக்கு நண்பன் சுக்ரீவன்
தகவும் - அறிஞர்க்கு உரியது அடக்கம்:
அதுவாதல் - ஆடைக்கு நூல்.
பொருட்டு - கூழிற்குக் குற்றேவல் செய்யும்.
முறை - சாதிதற்கு மகன்.

பொருட்டு, ஆக நிமித்தம் என்று என்பன இக்காலப்பிரயோகத்தில் நான்காம் வேற்றுமைச் சொல்லுருபாகப்பயன்படுகின்றன.

ஐந்தாவதாகத் தொல்காப்பியர் சுட்டுவது இன் என்ற வேற்றுமையாகும். இவ்வேற்றுமையானது இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருளென்னும் பொருண்மையை உணர்த்தும் என்கிறது தொல்காப்பியம்.

நன்னூலார் 'இன்' என்ற உருபுடன் 'இல்' என்ற உருபையும் சேர்த்துச் சொல்கின்றார்.

''ஐந்தாவதனுருபில்லுமின்னும்
நீங்கலொப்பெல்லையேதுப் பொருளே''

ஐந்தாம் வேற்றுமைப் பொருளாக நீங்கல், எல்லை, ஒப்பு, ஏது முதலியவற்றைச் சுட்டுகின்றார்

நீங்கல் - ஊரில் நீங்கினான்
எல்லை - வவுனியாவின் தெற்கு அனுராதபுரம்
ஒப்பு - இவனின் அவன் நல்லவன்
ஏது - அறிவில் சிறந்தவன். சிவம்.

இக்காலப்பிரயோகத்தில் இல், இன் உருபுகளோடு இருந்து. நின்று ஆகிய சொல்லுருபுகளும் ஐந்தாம் வேற்றுமைப் பொருளினை உணர்த்தி வருதல் காணப்படுகிறது.

ஆறாம் வேற்றுமையாக 'அது' என்ற வேற்றுமையினைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இவ்வேற்றுமை கிழமைப் பொருளை உணர்த்துமென்றும் அது தற்கிழமை பிறிதின் கிழமை என இரண்டுவகைப்படும் என்கிறார்.

நன்னூலார் ,அது' என்ற உருபுடன் 'ஆது' 'அ' என்ற உருபையும் சேர்த்துச் சுட்டுகின்றார்.

ஆறனொருமைக் கதுவுமாதுவும்
பன்மைக்கவ்வுமுருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவினீட்டத்
திரிபினாக்கமாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே''

பொருளாக உடைமைப் பொருளைக் குறிப்பிடுகின்றார். அது, ஆது என்ற உருபுகள் ஒருமைக்கும், அ என்ற உருபு பன்மைக்கும் கையாளப்படும்.

ஆறாம் வேற்றுமை உருபு 'அ'ஃறிணைக்கு மட்டுமன்றி உயர்திணைக்கும் கையாளப்படல் இன்றுள்ள வழக்கு என்றும் இவ்வாறு கையாளப்படும் போது ஆறாம்வேற்றுமை, அவ்விடங்களிலே தனக்குரிய உடைமைப் பொருளினை இழந்த உறவு, பகை நட்பு ஆகிய நான்காம் வேற்றுமைப் பொருள்களைப் பெறுகின்றது என்கிறார். வித்துவான் க. சொக்கலிங்கம் (இலக்கணத் தெளிவு)

உதாரணம்:-

கந்தனது மைந்தன் - உறவுப் பொருள்பெற்றது இராமனது பகைவன் - பகைப் பொருள் பெற்றது கண்ணனது நண்பன் - நட்புப்பொருள் பெற்றது.

'உடைய' என்ற சொல்லுருபு ஆறாம் வேற்றுமைக்கு உரியது.

உதாரணம்:-

அவனுடைய புத்தகம்
அவனுடைய புத்தகங்கள்.

உயிர்குறுகிய மூவிடப் பெயர்கள் தமிழில் - உருபின்றியே ஆறாம் வேற்றுமைப் பொருளை உணர்த்த வல்லன.

உதாரணம்:- என் கண்; உன்முகம்

தொல்காப்பியர் ஏழாவது வேற்றுமையாக 'கண்' என்ற வேற்றுமையைக் குறிப்பிடுகின்றார், அது வினை செய்யா நிற்றலாகிய இடத்தின் கண்ணும் நிலமாகிய இடத்தின் கண்ணும்; காலமாகிய இடத்தின் கண்ணுமென அம்மூவகைக் குறிப்பின் கண்ணுந் தோன்றும் என்கிறார்.

நன்னூலார் ஏழாம் வேற்றுமைக்கு கண், கால், தலை, இடை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ்; புடை, முன், பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உன், உழி, உள், அகம், புறம், இல் என்ற பல உருபுகளைத் தருகின்றார்.

ஏழாம் வேற்றுமை இடப்பொருள் தரும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகைப் பெயர்ப் பொருள்களையும் இடமாகக்கொண்டு இவ் வேற்றுமை அமைகிறது.

தொல்காப்பியர் எட்டாவதாகக் குறிப்பிடுவது 'விளி' வேற்றுமையாகும். இது பற்றிய இலக்கணங்களை 'விளி மரபு' என்னும்' தனியொரு இயலிலே விபரித்துக் கூறுகின்றார் இதற்கு உருபு இல்லை. பொருள் விளித்தல் என்பதாகும்.

நன்னூலாரும் இவ்வாறே சுட்டுகின்றார் எழுவாய் வேற்றுமை போலன்றி இது பெரும்பாலும் திரிபடைந்தே தனக்குரிய விளிப்பொருளைத் தருகின்றது.

இவ்வாறாகத் தொல்காப்பியமும் நன்னூலும் வேற்றுமை பற்றிய இலக்கணங்களைக் குறிப்பிடுகின்றன.

**செவ்வேள்**

# அளவையியல்

★ பின்வரும் வினாவை கவனிக்க

உறழ்வு மாறிலியையும் மறுப்புமாறிலியையும் பயன்படுத்தி பின்வரும் குறியீட்டு வாக்கியத்திற்குச் சமனான குறியீட்டு வாக்கியத்தை தந்து அவை சமன் எனவும் காட்டுக.

(பரீட்சார்த்திகள் இதுபோன்ற மற்றைய மாறிலிகளையும் அறிந்திருத்தல் வேண்டும்)

i) $(\sim P \rightarrow \sim Q)$

ii) $\sim(P \wedge Q)$

விடை

இவ்வினாவுக்கு விடை காணும்போது பின்வரும் பதிலீட்டு விதியை கருத்தில் கொள்வது இலகு.

1) $(P \rightarrow Q) = (\sim P \vee Q)$

2) $(P \wedge Q) = \sim(\sim P \vee \sim Q)$

3) $(P \leftrightarrow Q) = [(P \rightarrow Q) \wedge (Q \rightarrow P)]$

ஆகவே இதன்படி மேல்தரப்பட்ட வினாவின் விடை

1) $(\sim P \rightarrow \sim Q) = (P \vee \sim Q)$

உண்மை அட்டவணையில் சமன் என பின்வருமாறு காட்டலாம்

| P Q | ($\sim$P | $\rightarrow$ | $\sim$Q) | $\leftrightarrow$ | (P | v | $\sim$Q) |
|---|---|---|---|---|---|---|---|
| T T | F | T | F | T | T | T | F |
| T F | F | T | T | T | T | T | T |
| F T | T | F | F | T | F | F | F |
| F F | T | T | T | T | F | T | T |

∴ சமன்

II) $\sim(P \wedge Q) = (\sim P \wedge \sim Q)$

உண்மை அட்டவணையில்

| P Q | $\sim$(P$\wedge$Q) | | | $\leftrightarrow$ | ($\sim$P | v | $\sim$Q) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| T T | F | T | T | T | T | F | F | F |
| T F | T | T | F | F | T | F | T | T |
| F T | T | F | F | T | T | T | T | F |
| F F | T | F | F | F | T | T | T | T |

∴ சமன்

பகுதி ஈ

யாதேனும் பிரச்சினைகள் தரப்பட்டு உண்மை அட்டவணை முறையில் தீர்வு காணுதல்

இங்கு இருவகையில் வினா இடம் பெறுவது உண்டு அதில் ஒன்று குறித்த பிரச்சினை அல்லது விடயம் தொடர்பான தரவு தரப்பட்டு அதில் இருந்து பெறப்படும் முடிவு என்ன என வினவப்படும் மற்றையது தரவும் முடிவும் தரப்பட்டு அம் முடிவு சரியா அல்லது வலிதா என வினவப்படும். பின்வரும் வினாக்களை கவனிக்க.

உ+ம் I

1. களவு சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணை ஒன்றில் A, B ஆகிய இருவர் சாட்சியங்களாக இருந்தனர். இங்கு A சாட்சிப்படி கமல் இக்களவை செய்தான் ஆயின் நிமல் அவனுடன் கூட்டுச் சேர்ந்தது உண்மை. B யின் சாட்சிப்படி நிமல் கமலுடன் கூட்டுச் சேர்ந்தது பொய். ஆனால் கதிரேசனே இக்களவைச் செய்தான்.

இங்கு இரு சாட்சியங்களும் ஏற்கப்பட்டால் விசாரணைக் குழுவின் தீர்ப்பு எவ்வாறு அமையும் என உண்மை அட்டவணை முறையில் காட்டுக.

விடை

சுருக்கத்திட்டம்

P கமல் இக்களவைச் செய்தான்
Q நிமல் கமலுடன் கூட்டுச் சேர்ந்தான்
R கதிரேசன் இக்களவைச் செய்தான்

குறியீட்டுத் திட்டம்

A - $(P \rightarrow Q)$
B - $(\sim Q \wedge R)$

தீர்வு

$(p \rightarrow Q) \wedge (\sim Q \wedge R)$
F T F T T T T

இதன்படி

PF, QF, RT

ஆகவே கமல் இக்களவைச் செய்தான் என்பது பொய். நிமல் கமலுடன் கூட்டுச் சேர்ந்தான் என்பது பொய். கதிரேசன் இக்களவை செய்தான் என்பது உண்மை.

உ+ம் II

கொலை பற்றிய வழக்கு விசாரணை ஒன்றில் A, B ஆகிய இருவர் தமது சாட்சியை பின்வருமாறு கூறினர்.

A யின் சாட்சிப்படி கனகன், தினகரன் என்ற இருவரில் ஒருவரே இக்கொலையைச் செய்தனர். B யின் சாட்சிப்படி கனகன் இக்கொலையைச் செய்தான் ஆயின் தினகரன் குற்றவாளி.

மேற்கூறிய இரு சாட்சியும் உண்மை எனக் கொண்டு நீதவான் தினகரன் குற்றவாளி என்ற முடிவுக்கு வந்தார். நீதவானின் இம்முடிவு வலிதானதா எனக் காட்டுக

விடை

சுருக்கத்திட்டம்

p - கனகன் இக்கொலையை செய்தல் (குற்றவாளி)
Q - தினகரன் இக்கொலையை செய்தல் (குற்றவாளி)

குறியீட்டுத்திட்டம்

A $(P \vee Q)$
B $(P \rightarrow Q)$
∴ நீதவான் முடிவு Q

உண்மை அட்டவணை பரிசோதனை

$[(P \vee Q) \wedge (P \rightarrow Q) \rightarrow Q$
F T F T F T F F F

முரண் ∴ முடிவு வலிதானது

பகுதி உ

தமிழ் வாக்கியத்தை குறியீட்டுவாக்கியம் ஆக்குதல். இவ்வினாவுக்கு தரப்பட்ட சு. திட்டப்படி சரியான குறியீட்டை அமைத்தல் வேண்டும்

உ+ம் P- அவன் வெள்ளையன்
Q- அவன் கறுப்பன்

அவன் வெள்ளையன் அல்லது கறுப்பன் ஆவான் ஆனால் இரண்டுமாக அல்ல

விடை

$[(P \vee Q) \wedge \sim(P \wedge Q)]$

பகுதி ஊ

குறியீட்டு வாக்கியத்தை தமிழ்வாக்கியமாக்குதல் இவ்வினாவிற்கு தரப்பட்ட சுருக்கத்திட்டத்தைக் கொண்டு ஒரு தொடர்வாக்கியமாக எழுத வேண்டும்.

உ+ம்

P - X படித்தவன்
Q - X அரசியல் வாதி

i) $[(P > \sim Q) \wedge (\sim P \rightarrow Q)]$


விடை

X படித்தவன் ஆயின் அரசியல்வாதி அல்ல அத்துடன் அவன் படித்தவன் அல்ல என்றால் அரசியல் வாதி ஆவான்.

பகுதி எ

வாதங்கள் அமைப்பதையும் குறியீட்டு அளவையியல் தொடர்பான சிறுகுறிப்புக்களையும் கவனத்தில் கொள்க.

பகுதி I இன் பிரிவு II தொடரும்



# விலங்கியல் A/L

## யானைக்கால் நோய் Elephantiasis

அறிமுகம்

இது ஆசியா, ஆபிரிக்கா நாடுகளில் வசிக்கும் மனிதர்களில் காணப்படும் பைலாரியா ஒட்டுண்ணியினால் ஏற்படும் நோய் ஆகும். இலங்கையில் மேல்மாகாண மேற்குக் கரையோரங்களில் வசிக்கும் மக்களில் அடிக்கடி இந்நோய் அவதானிக்கப்படுகிறது. ஆனால் இந்நோய் பொதுவாக கவனிப்பாரற்ற நோய்களிடத்தே தான் குணமாகமல் காணப்படுகிறது. இந்நோய் **Wuchereria Bancrofti** அல்லது **Filaria Bancrofti** எனும் நெமற்றோடாவைச் சார்ந்த கலப்புறபல்கல இனத்தைச் சேர்ந்த நிறைவுடலியினால் ஏற்படும் இதனால் இது பைலாரியா நோய் (**Filariasis**) எனவும் அழைக்கட்படும்.

இந்த ஒட்டுண்ணியின் தொற்றும் பருவநிலைகளை ...

... கும். இது 6,2 mm விட்டமுடையதாகவும், வளையக்கூடிய உறையினால் சூழப்பட்டுமிருக்கும்.

2. இக்குடம்பி பகல் நேரங்களில் உடலின்ஆழமான பாகங்களில் உள்ள குருதிக் கலன்களில் காணப்பட்டு இரவு நேரங்களில் (பிற்பகல் 10/2200 மணி தொடக்கம் முற்பகல் 2/0200 மணி வரை) தோலின் மேற்பரப்பு சுற்றோட்ட குருதிக்கலன்களை அடையும்.

3. இதன் போது மனிதனில் இராக்காலத்தில் குருதி குடிக்கும் **Culex foctigans** எனும் இன பெண் நுளம்பு குருதியை குடிக்கும் போது குருதியுடன் சேர்த்து இக்குடம்பியும் உள்ளெடுக்கப்படும்.

4. இவை நுளம்பின் இரைப்பைச் சுவரை துளைத்து குருதிக் குழியை அடையும் பின்னர் அங்கிருந்து ...

... விதைப்பை, நீர்ச்சுரப்பி போன்றன வீங்குதல்;- முதிர்ந்த நிறைவுடலிகள், இறந்த நிறைவுடலி உடல்கள் நிணநீர்க்கானில் திரளாகக் காணப்படும்போது நிணநீர்க்கானை அடைக்கும். இதன் விளைவாக இதனைச் சுற்றியுள்ள இழையங்கள் அதிக வளர்ச்சியுற்று பெரிதாக வீக்கமடையும் இது யானைக்கால் நோய் அல்லது பைலாரியா நோய் எனப்படும். இது எப்பொழுதும் அல்லாமல் சில நிலைமைகளிலே ஏற்ப்டும்.

2. தோலுக்கு அண்மையிலுள்ள நிணநீர்முடிச்சுக்கள் வீக்கமுற்றுக் காணப்படல்:-

நிறைவுடலிகள் நிணநீர்ச் சுற்றோட்டத்தை தடை செய்வதனாலும் நிணநீர்முடிச்சில் தொற்றுதலை ஏற்படுத்துவதினாலும் தோலுக்கு அண்மையில் உள்ள நிணநீர் முடிச்சுக்களில் ஏற்பட்ட வீக்கம் வெளித்தெரியக்கூடியதாக உள்ளது.

3. காய்ச்சல் ஏற்படல்:- ...

... ஆயுள் காலம் கூடியவை. அத்துடன்100 % மானவை விலங்குகளில் குருதியை உறிஞ்சிக் குடிப்பவையாகும். எனவே பெண் நுளம்புகளே காவிகளாக அமைகின்றன. ஆண் நுளம்புகள் வாழ்க்கைக்காலம் குறைவானதாகவும், பழங்கள் தாவரங்களின் மென்மையான பாகங்கள் ஆகியவற்றிலிருந்து சாற்றை உறிஞ்சிக் குடிக்கும்.

5. இந் நுளம்பினங்கள் காவிகளாகத் தொழிற்படுவதற்கு கடத்தப்படும் ஒட்டுண்ணிகளுக்கு சகிப்புத் தன்மையையும், நீண்டகால வாழ்க்கையுடையதாக இருப்பதும், குற்றியுறிஞ்சும் இயல்புடையதாக இருப்பதும் ஏற்ற அனுகூலங்களாகும்.

### Culex Fatigans

இவ்வினமானது அயனமண்டல, உபஅயனமண்டல பிரதேசம் முழுவதிலும் காணப்படும். இப் பிரதேசங்களின் நகரங்கள், பண்ணைகள், கிராமப்புறங்கள், வீடுகள் என்பவற்றில் வசிக்கின்றன. வசந்த காலத்தில் மிக ஏராளமாகக் காணப்பட்டபோதிலும், கால நிலை பாதகமான நிலைமைகளில், மரப்பொந்துகள், குகைகள், தானியக்களஞ்சியங்கள் ஆகியவற்றில் ஒய்வாக இருக்கும். ஆண்நுளம்பு ...

... நுளம்புவலை பாவித்தல், நுளம்புச்சுருள் அல்லது புகையூட்டல்கிற்றனெல்லாஎண்ணெய் உடலிற் பூசுதல் ஆகிய செயல் முறைகள் பின்பற்றப்படும்.

ii) தேங்கி நிற்கும் நீர்நிலைகளை அழித்தல்

இதன்மூலம் நுளம்பு விருத்தியடையும் பிரதேசங்கள் அழிக்கப்படும்- இம்முறையில் நுளம்பின் ஆரம்ப வாழ்க்கை வட்டம் விருத்தியடையாது தடுக்கப்படுவதினால் காவியின் வாழ்க்கை வட்டம் பூர்த்தியாகாது ஆரம்பத்தில் தடுக்கப்படும் ஓர் இலகுவான முறையாகும்- இத்தடுப்பு முறையில் நீர்ப்போக்குகளில் சிறு குட்டைகள் உருவாகுதல் தடுக்கப்படும் இம்முறையானது. இலங்கையில் நுளம்பினால் பரவல் அடையும் நோயை எதிர்ப்பதற்கான நற்பயன் மிக அரிக்கக்கூடிய முறையாகும். ஆனால் தோட்டங்கள் வீட்டுச்சுற்றாடல்களில் காணப்படும் தகரங்களையும். சிரட்டைகளையும் அகற்றும் நடவடிக்கையானது நோயை கட்டுப்படுத்துவதற்கு வெற்றியளிக்காத முறையாகும்.

iii) நிறைவுடலி பருவங்கள் அழிக்கப்படுதல்.

இரசாயன முறையாக நீண்டகால தொழிற்பாடுடைய பூச்சிகொல்லிகளான டீ.டீ.ரி அல்லது மலத்தியோன் போன்றவற்றை விசிறி நிறைவுடலிகளை அழித்தல் அல்லது விரட்டுதல், நீர்நிலைகளுக்கு விசுறுவதன் மூலம் குடம்பி கூட்டுப்புழு பருவங்கள் அழிக்கப்படும். தேவையற்ற நீர்த்தேக்கங்களுக்கு எண்ணெய் விசிறி குடம்பி, கூட்டுப்புழு பருவங்களை அழித்தல். உயிரியல் முறையாக நீர் நிலைகளில் கம்பூகியாக கப்பிஸ் போன்ற குடம்பி, கூட்டுப்புழு பருவங்களை உண்ணும் இயற்கை எதிரிகளான மீன்களை வளர்த்தல்.

3. ஆலோசனை

மக்களுக்கு நோயின் கொடுமையையும், அதனால் விளையக் கூடிய நஷ்டங்களையும் விளக்கி ஒத்துழைப்பு பெறல் இம்முறை எல்லா ஒட்டுண்ணிகளுக்கும் பொருந்தும்

(தொடரும்)

# ஐ. தே. க; தோல்விக்கு செயலாளர்கூறும் காரணம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் தோல்வியுற்ற ஐக்கிய தேசியக் கட்சியில் பெரும் பின்னடைவுகள் காணப்படுகிறது. பொதுத் தேர்தலில் தோல்வியுற்றமைக்கும் இதுவே பிரதான காரணமாகும். இவ்வாறு ஐ... காரணமாகும் எனவும் தெரிவித்தார். அத்துடன் தேர்தல் காலங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி 145 ஆசனங்களை எதிர்பார்த்ததாகவு. இந்தளவுக்கு அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதையும், ஐக்கிய ...

# பயிற்சி வகுப்புக்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாய திணைக்களத்துடன் இணைந்து விவசாய பயிற்சி வகுப்புக்களை பரவலாக நடாத்தி வருகின்றது. யாழ் மாவட்டத்தில் கடந்த ஆடி மாதத்தில் மட்டும் 13 பயிற்சி வகுப்புக்கள் நடைபெற் ...

crofti அல்லது Filaria Bancrofti எனும் நெமற்றோடாவைச் சார்ந்த கலப்புற பல்கல இனத்தைச் சேர்ந்த நிறைவுடலியினால் ஏற்படும் இதனால் இது பைலாரியா நோய் (Filariasis) எனவும் அழைக்கப்படும்.

இந்த ஒட்டுண்ணியின் தொற்றும் பருவநிலைகளை கடத்துவதில் இராக்கால வாழ்க்கையுள்ள Culex Fatigans எனும் இன பெண் நுளம்பு இலங்கையில் காணப்படுகிறது. எனவே இந்நுளம்பு இவ்வொட்டுண்ணியின் காவியாகவும், இடைவிருந்து வழங்கியாகவும் தொழிற்படுகிறது. எனினும் இவ்வொட்டுண்ணி காவியில் பெருக்கத்தையோ, வாழ்க்கை வட்டத்தில் மிகை இனப்பெருக்கத்தையோ காட்டாமல் இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## நிறைவுடலி அமைப்பு

நிறைவுடலியானது இரு முனையும் கூரானதாக நீண்ட உருளையுருவுடையதாக, பழுப்பு நிறமுள்ளதாகவும் அகத்தே போலி உடற்குழியையும் கொண்டிருக்கும் இவை மனிதனின் நிணநீர்த் தொகுதியைச் சார்ந்த நிணநீர்க்கான், நிணநீர் முடிச்சு என்பவற்றில் பின்னிய நிலையில் காணப்படும் சிலவேளைகளில் இவை நார் இழையங்களினாலும் சூழப்பட்டிருக்கும் கொழுக்கிப்புழுவைப் போன்று இவற்றிலும் இலிங்க ஈருடமை இயல்பு காணப்படும். ஆண் சிறியது 4 cm நீளமுடையதாகவும் 0.1mm விட்டமுடையதாகவும், காணப்படும் இவற்றின் வால் சுருண்டு, பல சிம்பிகளைக் கொண்டிருக்கும். பெண் 10 cm நீளமுடையதாகவும், 0.25 mm விட்டமுடையதாகவும் காணப்படும்.

## வாழ்க்கை வட்டம்

1. நிறைவுடலி ஆணும், பெண்ணும் நிணநீர்த் தொகுதியில் புணர்ந்து அகக் கருக்கட்டலை நடாத்தி அக விருத்தியின் விளைவாக நுண் பைலாரியா (Microfilariaie) எனும் முதல் நிலைக் குடம்பிகளைத் தோற்றுவிக்கும். இவை இரவு வேளைகளில் குருதி குடிக்கும் Culex foctigans எனும் இன பெண் நுளம்பு குருதியை குடிக்கும் போது குருதியுடன் சேர்த்து இக்குடம்பியும் உள்ளெடுக்கப்படும்.

4. இவை நுளம்பின் இரைப்பைச் சுவரை துளைத்து குருதிக் குழியை அடையும் பின்னர் அங்கிருந்துநெஞ்சறைத் தசைகளை அடையும் அங்கு முதலாம் தடவை தோல்சழற்றி 2-ம் பருவக் குடம்பி நிலையை அடையும் 2-ம் பருவக் குடம்பியும் 2-ம் தடவை தோல் சழற்றி 3-ம் பருவக் குடம்பி நிலையை அடையும் இதன் போது மைக்குரோ பைலாரியா குடம்பி வளர்ச்சியடைந்து தடித்து குறுகியதாகக் காணப்படும்.

5. 3-ம் பருவக்குடம்பியே தொற்றும் பருவ நிலையாகும் இது நுண்ணியது உறையினால் சூழப்பட்டது நீண்ட உருளையுருவான புழுப் போன்ற உடலையுடையதாகக் காணப்படும்.

6. பின்பு நெஞ்சறைத் தசையை விட்டு நீங்கி உமிழ்நீர்சுரப்பியை அடையும். அங்கிருந்து தும்பிக்கை எனும் வாய் உறுப்பை அடையும்.

7. இந்நிலையில் மனிதனின் வெப்பமான, ஈரலிப்பான தோலில் குருதியைக் குடிக்கும்போது குடம்பி தும்பிக்கையை விட்டு நகர்ந்து தோலின் மேல் விடப்படும் இவை தோலை துளைத்து உடலின் உள்ளே சென்று நிண நீர்த்தொகுதியை அடையும்.

8. நிண நீர்த்தொகுதியில் 3-ம் பருவக்குடம்பி தோல் கழற்றி 4-ம் பருவக் குடம்பி நிலையை அடையும். 4-ம் பருவக்குடம்பி தோல் கழற்றி நிறைவுடலியாகும் இந்நிறைவுடலி நிணநீர்த் தொகுதியில் போசணையைப் பெற்று வளர்ச்சியடைந்து இனப்பெருக்கத்தில் ஈடுபடும்

## நோய் அறிகுறிகளும் வாழ்க்கை வட்ட நிலைகளும், வாழ்க்கை முறையும்.

1. உடலின் தொங்கும் பாகங்களான கால், கை, நிறைவுடலிகள் நிணநீர்ச் சுற்றோட்டத்தை தடை செய்வதனாலும் நிணநீர்முடிச்சில் தொற்றுதலை ஏற்படுத்துவதினாலும் தோலுக்கு அண்மையில் உள்ள நிணநீர் முடிச்சுக்களில் ஏற்பட்ட வீக்கம் வெளித்தெரியக்கூடியதாக உள்ளது.

3. காய்ச்சல் ஏற்படல்:- உடலில் நிறைவுடலி காணப்படும் இடங்களில் பற்றீரியா தொற்றலும் ஏற்படும். இதன் விளைவாக காய்ச்சல் ஏற்படுகின்றது.

## நோயைக் கண்டுபிடித்தல்

1· கால், கை, விதைப்பை, மார்பகம் போன்ற பகுதிகளில் அசாதாரண வீக்கங்களை அவதானித்தல்.

நகரங்கள், ... மப்புறங்கள், வீடுகள் என்பவற்றில் வசிக்கின்றன. வசந்த காலத்தில் மிக ஏராளமாகக் காணப்பட்டபோதிலும், கால நிலை பாதகமான நிலைமைகளில், மரப்பொந்துகள், குகைகள், தானியக்களஞ்சியங்கள் ஆகியவற்றில் ஓய்வாக இருக்கும். ஆண்நுளம்பு ஏறக்குறைய மூன்று கிழமை வரை உயிர் வாழ்ந்து பெண்ணுடன் புணர்ச்சியில் ஈடுபட்டபின்னர் இறக்கும். பெண் நாலுகிழமைதொடங்கிஅனேகமாதங்கள் உயிர் வாழும். ஆயினும் அவற்றின் எல்லாம் முட்டைகளை இட்டபின்னர் இறக்கும்.

எனவே இந்நுளம்பு ஒரு

# மோ. மேரின் அல்போன்ஸ்

(ஆசிரியர், பரியோவான் கல்லூரி)

2. நோய் பரவுமெனக் கருதப்படும் இடங்களில் வாழ்பவர்களுக்கு நள்ளிரவில் குருதிப்பரிசோதனை இடையிடையே செய்து மைக்கிரோ பைலாரியாக்களை அடையாளம் காணல்

## நுளம்பு வகைகள்

1. நுளம்பு வகைகளில் Culex, Anopheles Aedes ஆகியன முக்கிய சாதிகளாக கருதப்படுகின்றன ஏனென்றால் மனிதனுக்கு நுளம்பினால் கடத்தப்படும் முக்கிய ஒட்டுண்ணிகளுக்கு இவையே காவிகளாக அமைகின்றன.

2. இந்நுளம்பு வகைகள் கருமை Arthropoda, வகுப்பு Insecta வருணம் Diptera ஆகிய பாகுபாட்டியல் பிரிவைச் சார்ந்தவை.

3. இவை குறுகிய நீண்ட உருளையுருவான உடலையும், நீண்ட அனேக துண்டங்களினால் ஆன உணர்கொம்பையும், நீண்ட உருளையுருவான மூன்று சோடிக் கால்களையும், குத்தி உறிஞ்சக் கூடிய நீண்ட தும்பிக்கை எனும் வாய் உறுப்பையும் ஒரு சோடி இறகும் உடையன.

4. பெண்நுளம்புகள் ஆண் நுளம்புகளிலும் பார்க்க வருடத்தில் அனேக சந்ததிகளை உருவாக்கும்' ஆணும் பெண்ணும் புணர்ந்தபின்னர் நிலையான நீர்நிலைகளான குளம், குட்டை, மழை நீர், காணப்படும் இடங்கள் ஆகியவற்றில் இரவு நேரங்களில் ஒரு தடவையில் 300க்குமேற்பட்ட முட்டைகளை இடும் இந்தமுட்டைகள் செங்குத்தாக ஒன்றோடுஒன்று இணைந்து மிதந்த நிலையில்காணப்படும்.

## கட்டுப்பாடு

1. நோயாளிக்கு சிகிச்சை அளித்தல்.

நோயாளிக்கு ஏற்ற மருந்தினைப் பிரயோகித்து நோயைக் கட்டுப்படுத்துதல் அத்துடன் நோயாளியைத் தனிமைப்படுத்தி தொற்றுதல் மேலும் புதியவர்களுக்கு பரவல் அடைவதைத் தடுத்தல்.

2. காவியைக் கட்டுப்படுத்தல்

i) நிறைவுடலி கடிப்பதிலிருந்துபாதுகாத்தல்

இதன் மூலம் தொற்றுதல் அடைந்துள்ள நிறைவுடலி நுளம்பு மூலம் மனிதனுக்கு தொற்றுதல் ஏற்படுத்தல் தடுக்கப்படும். இம்முறையில் உறங்கும் போது

# செயலாளர் கூறும் காரணம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற ஐக்கிய தேசியக் கட்சியில் பெரும் பின்னடைவுகள் காணப்படுகிறது. பொதுத் தேர்தலில் தோல்வியுற்றமைக்கும் இதுவே பிரதான காரணமாகும்' இவ்வாறு ஐ. தே. கவின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பதினேழாண்டுகளாக ஒரே கட்சி ஆட்சியில் இருந்ததும் மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்து இருப்பதும் நியாயமானது. இதனையே மக்கள் செய்துள்ளதாக குறிப்பிட்ட அவர் இதுவும் பின்னடைவு ஏற்படுவதற்கு ஒரு காரணமாகும் எனவும் தெரிவித்தார். அத்துடன் தேர்தல் காலங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி 145 ஆசனங்களை எதிர்பார்த்ததாகவும், இந்தளவுக்கு அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதையும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு சக்தியாக தொடர்ந்து இருக்கிறது என்பதையும், ஐ. தே. கவின் தோல்வி அவ்வளவு மோசமான நிலையல்ல என்றும், குறிப்பிட்டார்.

மேலும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது. ஐ. தே. கவின் வேட்பாளராக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவே தெரிவு செய்யப்படுவார் எனவும் தெரிவித்தார்.

# சோலைவரி, மின்நிலுவை அறவிட நடவடிக்கை

(தொல்புரம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசப் பகுதியில் வதியும் குடியிருப்பாளரிடம் இருந்து பெறப்படும் சோலைவரி மின்சாரம் போன்றவற்றின் நிலுவை பணம் முழுமையாக மேற்படி பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படவுள்ளது

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு தரப்பட்ட சூழ்நிலை காரணமாக இந்த சபைக்கு வருமானம் போதியதாக இல்லை. இந்த நிலையில் பொதுமக்களின் நலன் கருதி மேற்கொள்ளவுள்ள அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்து செல்வதற்கு சோலைவரி, மின்சாரநிலுவை போன்றவற்றை மீளப்பெறுவது அவசியமாகிறது.

எமது பிரதேச மக்களுக்கான அவசிய தேவைகளுள் சிலவற்றை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்திடம் இருந்து இன்றைய காலகட்டத்தில் எந்த உதவிகளையும் பெற முடியாதுள்ளது. இந்த நிலையில் மக்கள் தமது நிலுவை பணத்தினை சபைக்கு செலுத்துவது அவசியமாகிறது. இவ்வாறு மக்களின் ஒத்துழைப்பினை நல்கி வலிமேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு. கா. சந்திரராசா அவர்கள் துண்டுப் பிரசுரம் ஒன்றின் மூலம். ஒத்துழைப்பை வழங்கி நிலுவை பணத்தினை சபைக்கு செலுத்துமாறு மக்களைக் கேட்டுள்ளார். (41)

# குழாய்க்கிணறு அமைப்பு

குடியேற்றப் பகுதிகளில் நிலவும் தண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடன் பருத்தித்துறை நகரசபையை உள்ளடக்கிய அல்வாய் மேற்கு குடியேற்றம், கேணிக் குடியேற்றம் ஆகிய இடங்களில் தேச நிர்மாணிகளால் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியிலிருந்து இதே போல பல குழாய்க்கிணறுகளை தேவையான இடங்களுக்கு அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாய திணைக்களத்துடன் இணைந்து விவசாய பயிற்சி வகுப்புக்களை பரவலாக நடாத்தி வருகின்றது. யாழ். மாவட்டத்தில் கடந்த ஆடி மாதத்தில் மட்டும் 13 பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன. இப் பயிற்சி வகுப்புக்களில் 296க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இப் பயிற்சி வகுப்புக்களில் நடைமுறை விவசாய பிரச்சினைகளும், அவற்றுக்கான தீர்வுகளும் திருந்திய பயிற் செய்கை முறைகளும், பயிர் பாதுகாப்பு நல்லின விதை உற்பத்தி பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டது.

தொடர்ந்தும் இப்படியான பயிற்சி வகுப்புக்கள் நடைபெற உள்ளதாகவும் இப் பயிற்சி வகுப்புக்களில் சகல விவசாயிகளும் பங்கு பற்றி பயன் அடையுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது.

# மரக்கறி விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளது

(தொல்புரம்)

வலி. மேற்குப் பகுதியில் மரக்கறி வகைகள் சிலவற்றின் விலைகள் சற்று வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன.

மேற்படி பகுதியின் பொதுச் சந்தைகளில் தக்காளிப்பழம், கத்தரி, மரவள்ளி, போன்ற சில மரக்கறி வகைகளே விலையில் வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த வாரம் ரூபா 30 வரை விற்று வந்த தக்காளிப்பழம் நேற்று 8 ரூபாவாகவும், பத்து தினங்களுக்கு முன் 19 ரூபாவாக விற்றுவந்த கத்தரி 6 ரூபாவாகவும், மரவள்ளி தற்போது 10 ரூபாவாகவும் விற்கப்படுகிறது. இதே வேளை பயத்தங்காய் 20 ரூபாவாகவும், வெங்காயம் 25 ரூபாவாகவும் மேற்படி சந்தைகளில் விற்கப்படுவதை அவதானிக்க முடிந்தது.

(41)

## சிந்தனைக்கு..

ஒரு கட்சிக்கு உண்மையானவன் அவன்;
தான் எனும் தனிக்கட்சிக்கு
- ஜேம்ஸ் ரஸ்ஸல் லோவெல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 24 03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# தொண்டாவின் தடுமாற்றம்

தேர்தலுக்கு முன்பிருந்த நிலைப்பாட்டில் இருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளது போல் தெரிகின்றது. இதன் பிரகாரம் தொடர்ந்தும் ஐக்கிய தேசிய கட்சியுடன் நெருக்கமான உறவைக் கடைப்பிடித்தல், ஐ. தே. க. கொள்கைகளை ஆதரித்தல் என்பவற்றில் இருந்து அக்கட்சி பின்வாங்கத் தொடங்கியுள்ளதாக ஊகிக்க முடிகின்றது.

இதன் வெளிப்பாடே, பாராளுமன்றத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர்கள் தனிக்குழுவாக இயங்குவதற்கு மேற்கொண்ட முடிவாக அரசியல் அவதானிகள் மட்டத்தில் கருதப்படுகின்றது. இதனை உறுதிப்படுத்துமாப் போன்று, கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் டி. பி. விஜேதுங்காவை சந்தித்த தொண்டமான், இ. தொ. கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் ஐ தே கவின் கொள்கைக்கு சார்பாக நடந்து கொள்ளமாட்டார்கள்'' எனக் குறிப்பிட்டதைக் கருத முடியும்.

திரு. தொண்டமானின் இந்நிலைப்பாட்டின் மாற்றத்திற்கு தோல்வியடைந்து விட்ட கட்சியுடன் / தோல்வி அடையப்போகும் கட்சியுடன் இனியும் கூட்டு வைத்துக் கொள்வதால் லாபம் எதுவும் இல்லை என்ற ரீதியில் காரணம் எனத் தெரிவிக்கப்படலாம். வெளிப்படையாக இது ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணமாகவும் இருக்கலாம்.

ஆனால், நடந்து முடிந்த தேர்தலில், பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெறும் என்பது பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான். இந் நிலையிலும், தொண்டமான் ஐ. தே. க. ஆதரவு வழங்க முடிவெடுத்தமையானது அவரது அரசியல் கணிப்பீட்டில் ஏதோ இடத்தில் தவறு இருந்தது என்பதையே வெளிக்காட்டுவதாகவுள்ளது. அவ்வாறு இல்லாது விட்டால், பொ. ஐ. முன்னணி தேர்தல் வெற்றி பெற்ற பின்னர் அவர் தற்பொழுது முடிவை மாற்றியிருக்க வேண்டி வந்திருக்காது.

ஆனால், தொண்டமானின் நிலைப்பாடு மாற்றத்திற்குத் தனியாக தேர்தல் தோல்வி மட்டுமல்ல புதிய அரசாங்கம் மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கும் பல நடவடிக்கைகளும் காரணமாக இருக்கலாம் என்பதே பலரது அபிப்பிராயமாகும்.

ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு சில நாட்களிலேயே கடந்த 17 வருட கால ஐ. தே. க. வின் ஆட்சியின்

# முன்னாள் ஆட்சியாளர்கள் தப்பி ஓடத் திட்டம்

## சிங்களப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

புதிய ஆட்சியாளர்களினால் லஞ்சஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கப்படலாம் என அஞ்சி முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா உட்பட சுமார் 500 உறுப்பினர்கள் சிறிலங்காவை விட்டு தப்பியோட இருந்ததாக ஹிரு எனும் சிங்கள பத்திரிகை குறிப்பிட்டுள்ளது

தேர்தலில் ஐ-தே-க- தோல்வியுறும் நிலை உறுதியானதும் அவர்களால் இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் எயர்லங்காவின் பிரிட்டிஷ் சேவை, சிங்கப்பூர் விமான சேவை ஆகியவற்றில் பயண முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் வெளிநாட்டு பயண இலாகாக்கள் இத்தகவலை வெளியிட்டதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

முன்னாள் நிதியமைச்சர் ரொனி டிமெல், காமினி திசாநாயக்கா, ஜனாதிபதியின் ஆலோசகர் விமல் விக்கிரமசூரிய, சிறிசேன கூரே, வீரசிங்க மல்லிமராச்சி,, ஹமீட், ஏ. எம். எஸ். அதிகாரி உள்ளிட்ட 500 ஐ தே க. உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கான முன் பதிவை மேற்கொண்டிருந்தனர்-

கடந்தகாலஆட்சியாளர்கள் புரிந்த ஊழல் மோசடிகள், 60 ஆயிரம் சிங்கள இளைஞர் கொலை, சூரியகந்த படுகொலை என்பன புதிய ஆட்சியாளர்களால்விசாரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த ஐ-தே-க பிரமுகர்கள் தப்பிச் செல்ல முயன்றதாக அப்பத்திரிகை கூறுகிறது-

# இரத்தினபுரி நகரசபை தலைவர் ராஜினாமா

(கொழும்பு)

இரத்தினபுரி நகர சபைத் தலைவர் திடீர்இராஜினாமா செய்துள்ளார்.

முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக இருந்த மகிந்தரத்தினதிலக்கா அண்மையில் நடைபெற்ற தேர்தலின் போது ஐ தே. கவுடன் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய ஆட்சி மாற்றத்தை யடுத்து இவர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

# அரசுடன் ஒத்துழைக்க நீலன் கூறும் விளக்கம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதானால் விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணி கருதுவதாலேயே அதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவளிக்க முன்வந்துள்ளது என நீலன் திருச்செல்வம் பிபிஸிக்கு தெரிவித்தார்

முன்னைய அரசு பிரச்சினையை தீர்க்க எந்த நடவடிக்கையையும் எடுக்க முன்வராத நிலையில் புதிய அரசு எடுக்கும் முயற்சிகள் வரவேற்கக்கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார் இதற்கு தென்பகுதி மக்களின் ஆதரவும் அரசுக்கு கிடைத்துள்ளது எனவும் நீலன் திருச்செல்வம் மேலும் தெரிவித்தார்

# உயர் அதிகாரிகள் பலர் கடமைக்குத் திரும்பவில்லை

(கொழும்பு)

கொழும்பில் ஆட்சி மாறியதைத் தொடர்ந்து அரச நிர்வாகத்தில் உயர் அதிகாரிகள் இதுவரை கடமைக்கு திரும்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஆட்சி மாற்றத்தின் காரணமாக அரச நிர்வாகத்தில் உயர் அதிகாரிகளின் பதவிகள் நிச்சயத்தன்மை குறைந்த நிலையில் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் தலைநகரில் அரச நிர்வாக அலுவலகங்களில் பெருமளவு வேலைகள் தேங்கிக் கிடப்பதாகவும் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (நி) (88)

# சேவைக் கால கருத்தரங்கு

யாழ். கல்வித் திணைக்களத்தின்-வலயம் I நல்லூர் கோட்டப் பாடசாலை சமூகக்கல்வி ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில்தொடங்கவுள்ளது சகல நல்லூர் கோட்டப் பாடசாலைசமூகக்கல்வி ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

# மருத்துவ அணி வெற்றி

சபாபதிப்பிள்ளை ஞாபகார்த்த சுழல் கிண்ணத்திற்காக யாழ் போதனா மருத்துவமனைஅணிக்கும் அச்சுவேலி றஜீவன் விளையாட்டுக் கழக அணிக்கும் கடந்த ஞாயிற்றுக்கிழமைநடந்தமோதலில்யாழ் மருத்துவமனை அணி ஐந்து விக்கட்டுக்களால் றஜீவன் அணியைவெற்றிகொண்டது.

# பிரதமர் சந்திரிகாவிற்கு சகோதரர் அனுரா வாழ்த்து

(கொழும்பு)

நாளை வியாழக்கிழமை சிறிலங்கா பாராளுமன்றத்தில் புதிய பிரதமராக சந்திரிகா குமாரணதுங்கவின் அமர்வை, தாம் பார்க்க விரும்புவதாக அவரின் சகோதரர் அனுரா பண்டாரநாயக்கா கேட்டதற்கு சந்திரிகா அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சகோதரியான சந்திரிகா பிரதமராக பாராளுமன்றத்திற்கு வருவதை தான் நேரில் பார்க்க விரும்புவதாகவும் இதற்கு அனுமதி தரும்படியும் அனுரா சந்திரிகாவிடம் தொலைபேசி மூலம் கோரினார். இதற்கு சந்திரிகா, நீர் எனது சகோதரன் என்ற ரீதியில் என் பாராளுமன்ற அமர்வை பார்க்க விரும்புகின்றீர்களா அல்லது ஐ. தே. க உறுப்பினர் என்ற வகையில் அனுமதி கோருகிறீர்களா என கேட்டதற்கு, சகோதரன் என்ற ரீதியிலேயே மேற்படி கோரிக்கையை தான் விடுத்ததாக அனுரா குறிப்பிட்டாராம்.

நாளை வியாழக்கிழமை தனது சகோதரி பிரதமராக சிறிலங்கா பாராளுமன்றத்திற்குள் நுழைவதை ஐ தே கவிற்கு கட்சிமாறிய அவரின் சகோதரரான அனுரா பண்டாரநாயக்கா எதிர்க் கட்சி உறுப்பினர் வரிசையிலிருந்து பார்வையிடவுள்ளார்

# சிறிசேனகூரே விலக்கல் ரணில் குழுவினர் அதிருப்தி

(கொழும்பு)

தேசிய பட்டியலில் இருந்து சிறிசேன கூரே நீக்கப்பட்டமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியில் ரணில் விக்கிரமசிங்காவின் குழுவினர் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

நடைபெற்ற பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்காவின் கணிசமான விருப்பு தெரிவு வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு இவர் தீவிர பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து சிறிசேன கூரேயுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முற்பட்ட போது அவர் எவ்வித பதிலையும் தெரிவிக்கமறுத்துள்ளார்.

# பணிப்பாளர்கள் பதவிவிலக புதிய அரசாங்கம் பணிப்பு

அரச கட்டுப்பாட்டில் இருந்த லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம், ரூபவாகினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் ஆகிய தொடர்பு சாதனங்களின் தலைமைப் பணிப்பாளர்களை பதவி விலகுமாறுபுதிய அரசு பணித்துள்ளது.

தேர்தல் வாக்குறுதிப்படி இந் நிறுவனங்களை சுதந்திரமாக இயங்கச் செய்யும் முகமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தெரிவித்துள்ளது தொடர்பு சாதனங்களின் பணிப்பாளர்கள் ஐ. தே- க அரசால் நியமிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது-

# மட்டக்களப்பில் பஸ்களுக்கு நீலநிற பூச்சு

மட்டக்களப்பில் பஸ்வண்டிகளுக்கு நீல வர்ணம் பூசப்பட்டு வருகிறது. அத்துடன் புதிய பிரதமர் திருமதி சந்திரிகாவின் உருவப்படங்கள் கொண்ட சுவரொட்டிகளும் பஸ்களில் ஒட்டப்பட்டுக் காணப்படுகிறது. மேலும் பஸ் வண்டிகளில் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவை எனப் பொறிக்கப்பட்டிருந்த இடத்திலும் நீல வர்ணம் பூசப்பட்டுள்ளது.

# 7 இந்திய அமைதிப் படையினர்

# கியூபாவிலிருந்து அகதிகள் அமெரிக்காவுக்கு ஓட்டம்

அரசாங்கம் மேற்கொள்ளத் தாமதித்திருக்கும் பல நடவடிக்கைகளும் காரணமாக இருக்கலாம் என்பதே பலரது அபிப்பிராயமாகும்.

ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு சில நாட்களிலேயே கடந்த 17 வருட கால ஐ. தே. க. வின் ஆட்சியின் போது நடைபெற்ற லஞ்ச, ஊழல், அதிகாரதுஷ்பிரயோகம் தொடர்பான விசாரணை தொடர்பாக ஆணைக்குழு ஒன்று அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளை புதிய அரசாங்கம் தொடங்கியுள்ளது.

இந்நிலையானது ஐ. தே. க. விலுள்ள பல முக்கிய புள்ளிகளையும் அவர்களுக்குத் துணைபோன பலரையும் சிக்க வைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. இதேசமயம் இம் மோசடிகள் தொடர்பாக பல ஆவணங்களை மறைக்கவும், அழிக்கவும் ஆட்சி மாற்றம் நடைபெறும் முன்னரே ஐ தே க மேற்கொண்டதாகவும் அதற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உத்தரவிட்டதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன இதேசமயம் பல தகவல்கள் ஆவணங்கள் புதிய அரசாங்கத்திடம் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் ஐ. தே. க. அரசாங்கத்தில் 17வருட காலமாக அமைச்சர் பதவி வகித்து, ஒரு சிரேஷ்ட அமைச்சர் என்ற நிலைக்கு உயர்ந்த தொண்டமான் தொடர்பாகவும் சில விசாரணைகள் தொடங்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வாறு தொடங்கபடுவதற்கு வாய்ப்புக்களும் இல்லாமல் இல்லை. அதற்கு ஆதாரங்கள்தேடிக் கொளவதற்கும் புதிய அரசிற்கு வாய்ப்புகள் உண்டு.

இதில் தொண்டமானாலும் ஐ. தே. க வினாலும் இடைநடுவில் கைவிடப்பட்டவரும், பழிவாங்கப்பட்டவருமான முன்னாள் அமைச்சர் செல்லச்சாமி பெ. ஐ. முன்னணிக்கு பெரிதும் உதவக் கூடும். தொண்டமான் மீது செல்லச்சாமி முன் வைத்த பிரதான குற்றச்சாட்டே ஊழல் மோசடி பற்றியதே ஆகும்.

இந்நிலையில் தொண்டமான் ஐ. தே கவினருக்கு வரும் ஆபத்துடன் இணைந்து தனக்கும் வருவதில் இருந்து பாதுகாத்துக் கொள்ள ஐ தே கவுடன் உள்ள உறவை முறித்துக் கொள்ள முடிவெடுத்திருப்பின் இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஆனால் இதனை மலையக மக்கள் நலனுக்கான நடவடிக்கை எனத் தொண்டமான் கூறக்கூடும். ஆனால் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில் இது மலையக மக்களின் நலனில் தொண்டமான் என்றுமே கரிசனையுடனே செயல்பட்டது இல்லை. அவ்வாறு செயற்படுவராக இருந்தால் ஐ தே கவுடன் தேர்தலில் இணைந்து ஒரே சின்னத்தில் போட்டியிட தொண்டமான் ஒப்புக் கொண்டிருக்கமாட்டார். குறைந்தது ஐ. தே. கவுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்தாவது தனிச் சின்னத்தில் போட்டியிட்டிருப்பார். இந்நிலையில் தொண்டமானின் தற்போதைய நிலைப்பாடும் வழமைபோலவே மலையக மக்களின் நலன் என்பதை விட தனிப்பட்ட தொண்டமானின் நலன் என்ற ரீதியிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதே ஏற்புடையதாகும்

# 7 இந்திய அமைதிப் படையினர் சோமாலியாவில் பலி

(மொகடிசியூ)

சோமாலியாவில் தலைநகர் மொகடிசியூ நகர் அருகே நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் 7 இந்திய ஐ நா அமைதிப்படையினர் பலியாகினர் மேலும் அறுவர் காயமடைந்தனர்.

இந்திய அமைதிப்படை ரோந்து அணி மீது ஜெனரல் அய்டீட் தலைமையிலான கிளர்ச்சிக் குழுவினர் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளினாலும், மோட்டரினாலும் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுவிட்டதாகவும் தேடுதல் நடவடிக்கை தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தேடுதல் நடவடிக்கையில் இந்திய அமைதிப்படையினரே ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பங்களாதேஷ் படகுவிபத்தில் 300க்கு மேற்பட்டோர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில்இடம்பெற்ற படகு விபத்தொன்றில் முந்நூறு பேர்வரை கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காணாமல் போயிருக்கலாம் என அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க பங்களாதேஷ் கடற்படை நடவடிக்கையில் இறங்கியுள்ளது

விபத்துக்குள்ளான படகில் 400 பயணிகள் வரை இருந்தனர் டாக்காவிலிருந்து நூறு கிலோமீற்றர் தூரத்தில் இவ் விபத்து இடம் பெற்றது அங்குள்ள துறைமுகமொன்றில்நங்கூரமிட முயற்சி செய்த போது இப் படகு மூழ்கியது.

அறுபது பயணிகள் காப்பாற்றப்பட்டதாக அந்நாட்டுப் பொலிசார் தெரிவித்துள்ளனர் ஏனையவர்கள் உயிர் தப்பியிருக்கக்கூடுமென தாங்கள் நம்பவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# இலங்கையுடன் நெருங்கி செயற்பட மாலைதீவு ஆர்வம்

பரஸ்பர நட்புறவுகளை மேலும் வளர்ப்பதற்காக இலங்கையுடன் நெருங்கிச் செயற்படும் ஆவல் கொண்டு இருப்பதாக மாலைதீவு அதிபர் மாமூன் அப்துல் கையூம் தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்து அவர் அனுப்பியுள்ள ஒரு செய்தியில் மேலும் குறிப்பிடுகையில், இரு நாட்டு மக்களும் பரஸ்பரம் நன்மை அடையும் வகையில், இரு தரப்பு ஒத்துழைப்பு மேலும் பலமடையும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# சந்திரிகாவின் ஆட்சியில் நட்புறவு பலமடையும்

**- சீனா நம்பிக்கை**

புதிய பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவின் பதவிக் காலத்தில் பாரம்பரியம் மிக்க நட்புறவு மேலும் பலமடையும் என்று சீனா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

புதிய பிரதமருக்கு சீனப் பிரதமர் லீபெங் அனுப்பி வைத்துள்ள ஒரு பாராட்டுச் செய்தியில் மேலும் குறிப்பிடுகையில், புதிய அரசாங்கத்தின் கீழ் இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நட்புறவும், பொருளாதார ஒத்துழைப்பும் தொடர்ந்து பலமடையும் என்று நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் பெண் பிரதமர் பாக். பிரதமரின் எதிர்பார்ப்பு

இந்தியாவிலும் பெண் ஒருவர் பிரதமராகப் பதவி வகித்தால் நன்றாக இருக்கும் என்று பாகிஸ்தான் பிரதமர் திருமதி. பெனசீர் பூட்டோ கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார். அத்துடன் இந்தியாவில் பெண் ஒருவர் பதவிக்கு வந்தால் சில சமயம் பதற்றத்தை தணிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் கூறினார்.

இலங்கையிலும் பெண் ஒருவர் பிரதமராக தெரிவு செய்யப்பட்டிருப்பதைத் தொடர்ந்து இந்தியாவின் நெருங்கிய அயல் நாடுகள் இரண்டிலும் பெண்களின் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கியூபாவிலிருந்து அகதிகள் அமெரிக்காவுக்கு ஓட்டம்

(வாசிங்டன்)

கியூபா அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ள போதும் கூட பெருமளவிலான அகதிகள் தொடர்ந்தும் கடல் மார்க்கமாக அமெரிக்காவிற்கு தப்பிச் செல்கின்றனர். அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திற்கு நேற்று முன் தினத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் வந்து சேர்ந்திருப்பதாக அமெரிக்க கடலோர காவற்படை அறிவித்துள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் தொண்ணூறு மைல் நீளமான கடற்பரப்பைக் கடந்து 6000க்கும் அதிகமான அகதிகள் கியூபாவிலிருந்து அமெரிக்கா போய்ச் சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை இக் கடற்பரப்பில் அகதிகளுக்கு ஏற்படும் உயிரிழப்பு குறித்து தாம் பெரிதும் கவலை கொண்டிருப்பதாக அமெரிக்க கடலோர காவற்படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# அணுசக்திகடத்தல் கட்டுப்படுத்த நடவடிக்கை

(பொன்)

அணுசக்திப் பொருட்கள் கடத்தப்படுவது தொடர்பான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் இணைந்து செயற்பட ஜேர்மனியும், ரஷ்யாவும் இணக்கம் தெரிவித்துள்ளன. இரு தரப்பு உளவு அறியும் நிறுவனங்களுக்கிடையில் தகவல்களை அதிகளவில் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வது எனவும் அவை இணக்கம் தெரிவித்து உள்ளன.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-08-24**

**புதன் இரவு**

08. 01- குயிலோசை- ''எதிர்கால தமிழீழச் சிற்பிகள்'' கிராமிய இசைச் சித்திரம்
08. 20- ஏர்முனை- ''எலுமிச்சையின் முக்கியத்துவம்'' உரைச்சித்திரம்
08. 30- செய்திகள்
08. 40- நாடகம் ''எல்லாளன்''

**1994-08-25**

**வியாழன் காலை**

07. 02- மாவீரவணக்கம்
07.15-விடுதலைக்கீதங்கள்
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகை செய்திகள்
07. 40- விடுதலைக்கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளை நூலகம்.



# சந்திரசேகரனின் ஆறு நிபந்தனைகள்; சந்திரிகா அரசு ஏற்றுள்ளதாம்

(கொழும்பு)

மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆறு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டு அவை ஏற்றுக்கொள்ளப்பட்டன என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை அமைக்க எமது ஆதரவும் அத்தியாவசியமாகிவிட்ட இந்நேரத்தில் எமது சமூகத்தின் ஜீவாதார பிரச்சினைகளை உறுதியோடு முன்வைத்து புதிய அரசை இணக்கத்துக்கு கொண்டு வரக்கூடியவாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது. அத்தோடு தேசிய அரசியலில் எமக்கேற்பட்டுள்ள தவிர்க்க முடியாத பொறுப்பையும், கடமையையும் தட்டிக்கழிக்க முடியாதுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ் உடன்பாட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்தமான நவீன வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு நடைமுறையில் இருக்கும் லயன் குடியிருப்புகள் முற்றாக ஒழிக்கப்படுவது தோட்ட மக்களின் குடியிருப்பு பிரதேசங்கள் உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படுவது, (இதன் மூலம் பாதை அமைப்பு, மின்விநியோகம், குடிநீர் விநியோகம் போன்ற வசதிகளை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பில் கொண்டுவரப்படும்) தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டதினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளிலிருந்து நிவாரணம் பெறுவது, பத்தனை சிறிபாத கல்வியியல் கல்லூரி தமிழ் மாணவர்களுக்கான தாக்குவது, அரசாங்க வேலை வாய்ப்புகளில் மலையக தமிழருக்கென விகிதாசாரம் ஒதுக்கப்படுவது, மலையக மக்களின் சமூக, பொருளாதார, கல்வி மற்றும் அபிவிருத்திக்காக நிர்வாக அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படுவது என்பவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

பட்டதாரிகள் வேலைவாய்ப்பு கடிதம

## 37 பேருக்கு சேவையாற்றும் நிலையம்பற்றிகுறிப்பில்லை

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளிற்கு அரசினால் வழங்கப்பட்ட வேலைவாய்ப்பு நியமனக் கடிதங்களில் முப்பத்தேழுபேரது கடிதங்களில் பணியாற்ற வேண்டிய இடம் குறிப்பிடப்படவில்லை.

அண்மையில் திட்ட அமுலாக்கல் அமைச்சினால் வேலையற்ற பட்டதாரிகளிற்கு அரச துறைகளில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நியமனக் கடிதங்களில் 37 பேரது கடிதங்களில் எந்த இடத்தில் கடமையைப் பொறுப்பேற்பது என்ற விபரம் குறிப்பிடப்படாததால் அவர்கள் நேற்று அரசாங்க அதிபரைச் சந்தித்து தமது நிலையை விளக்கினர். இதை அடுத்து அரச அதிபர் அதற்கான ஒழுங்குகளை தாம் மாகாண சபையுடன் தொடர்பு கொண்டு செய்து தருவதாக கூறியுள்ளார். (88)

## கலைப்பீடப் பரீட்சைகள் ஒக்டோபர் 01இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான வருடாந்த பரீட்சைகள் ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பமாகின்றன.

அன்றைய தினம் தொடக்கம் இரண்டாம் வருட மாணவர்களுக்கான பரீட்சையும், அதைத் தொடர்ந்து மூன்றாம், நான்காம் வருட பரீட்சைகளும் இறுதியாக முதலாம் வருட மாணவர்களுக்கான பரீட்சையும் நடைபெறவுள்ளன.

வெளிவாரி மாணவர்களுக்கான முதலாம் வருட பரீட்சையும் ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பமாகின்றன. தொடர்ந்து இரண்டாம் மூன்றாம் வருட பரீட்சைகளும் நடைபெறும் என பல்கலைக்கழக வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது,

ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், பாரம்பரிய மருத்துவம்

**கண்காட்சியும் கருத்தரங்கும் - 1994**

மேற்படி கண்காட்சி தொடர்பாக நடாத்தப்படும் பின்வரும் போட்டிகள் சம்பந்தமாக எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய இறுதி நாள் 94-09-07 திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

முதற்பெண்

கடற்பரப்பில் எத்தனை மைந்தர்களை கொன்றொழித்து எமது மண்ணின் பல மங்கையரின் குங்குமத்தையழித்து விதவைக் கோலம் பூணவைத்து எம் தமிழீழ குழந்தைகளை, தந்தையை இழந்து பிஞ்சுவயதில் பஞ்சத்தில் வாடவைத்து, பசியில் துடிக்கவைத்து, இருப்பிடங்களை கற்குவியலாக்கி கடலிலே நின்று கொட்டமடித்த சிறிலங்கா கடற்படையின் கடலிலே மிதக்கும் கோட்டை போன்ற கட்டளையிடும் தலைமைத் தாய்க்கப்பலையும், அதற்கு துணை நின்ற அதிவேக டோறா பீரங்கிப் படகினையும் தகர்த்தெறிந்து சிங்களக் கடற்படையினர் பலரைக் கொன்றும், வீரசாதனை படைத்து வீரச்சாவை தழுவிக்கொண்ட முதற்பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் வெற்றி நினைவாக எதிர் வரும் 26, 27-ம் திகதிகளில் தமிழீழமெங்கும் வீரவணக்கம் செலுத்தி நினைவு கூரப்படவுள்ளது.

இவ்விரண்டு நாட்களிலும் தமிழீழத்தின் இல்லங்கள் தோறும் இக்காவிய நாயகியின் உருவப்படத்தினை வைத்து சுடர் ஏற்றியும், மலர் சாற்றியும் தமிழீழ வீதிகளெங்கும் கறுப்பு, சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டியும், சந்திகள் தோறும் கரும்புலிகளது எழுச்சிப் பாடல்களை இசைத்தும் இம் மாவீரரின் உருவப்படம் தாங்கிய ஊர்தி பவனி வரும் வீதிகள் தோறும் விளக்கேற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தியும் இறுதி நாளில் கோட்ட ரீதியாக நடைபெறும் வெற்றி வீர வணக்கக் கூட்டத்தில் அனைத்து மக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டும் இக்கரும்புலியின் காவியத்தை உலகெங்கும் பறைசாற்றி இவருக்கு எமது எழுச்சிபூர்வமான இறுதி வீரவணக்கத்தை செலுத்திக் கொள்வோம்

## கோமாரி, மாகோ புறப்படுவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

கோமாரி மற்றும் மாகோ கப்பல்கள் வடபகுதிக்கான உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு கொழும்புத் துறைமுகத்திலிருந்து புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இக் கப்பல்கள் இரண்டும் நாளை பருத்தித்துறையை வந்தடையும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இதுவரை இக் கப்பல்கள் கொழும்பிலிருந்து புறப்பட்டது தொடர்பான தகவல் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன (88)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பொன்னம்மா

அமரர் சுப்பிரமணியம் பொன்னம்மா காலமாகிவிட்டார். இவர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும்-தச்சன்தோப்பு, சண்முகம் - பாக்கியத்தின் சகோதரியும், துரைராசசிங்கத்தின் அன்புத் தாயாருமாவார் இவர் புவனேஸ்வரி (அரசினர் வைத்தியசாலை யாழ் நகர்), சண்முகலிங்கம், தர்மகுலசிங்கம் பாக்கியராசா சுப்பிரமணியம் (வ்தனி ஜுவலறிசாவகச்சேரி, கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார் திலிப்குமார், பிரியறஜினி, ஜெயப்பிரதீபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் புவனபதி சங்கத்தானையில் இருந்து இன்று 24-8-94) பி ப 2 00 மணிக்கு தகனக்கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி மயானத்திற்கு (சாவகச்சேரி) எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

துரைராசசிங்கம்
மகன்
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

(9193)

## தமிழரின் விடுதலைப் போருக்கு சுதந்திரக் கட்சியும் காரணம்

-சந்திரிகா

இலங்கையில் தமிழ் பிரிவினை வாதம் தொடங்கியதற்கு காரணம் இரு முக்கிய கட்சிகளுமே. சிங்கள இனவா

பல

துறையமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா விடுத்த உத்தரவையடுத்து இவர்கள் நேற்று தம் பதவிகளை துறந்தனர் இவர்களது பதவி நியமனங்கள் ஐ. தே. க அரசால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை ரூபவாஹினியின் நிர்வாக பிரதிப்பணிப்பாளராக இருந்த ஆரிய ரூபசிங்க புதிய அரசின் தகவல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி

லாம் என்றும் ஜனாதிபதியிடம் அதிகஅதிகாரம்இருந்தும் அவரால் அவற்றை செயற்படுத்த முடியாது என்றும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் அரசியல்துறை பேராசிரியர் உயங்கொட தெரிவித்துள்ளார்.

சம்பிரதாயபூர்வ

கூட்ட தொடரானது புதிய சபாநாயகரை தெரிவு செய்வது உட்பட அப் புதிய சபாநாயகர் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்கள் என்றும் இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற ஆரம்ப நிகழ்ச்சிகள் முடிவடையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி

டி. பி விஜேதுங்கா சம்பிரதாயபூர்வமாக கலந்துகொள்ளவோ, ஆரம்ப உரையை

த்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தியமையாகும். இதற்கு சுதந்திரக் கட்சியும் ஒரு காரணம் என சந்திரிகாவும் ஒப்புக்கொண்டுள்ளார் என பி.பி.ஸி யின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி குறிப்பிட்டுள்ளார்.

தமிழரின் பிரச்சினையில்

விசர் நாய்க்கடி

க்கு இலக்கானதைத் தொடர்ந்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவருக்கு 14 ஏ ஆர்வி தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டது.

எனினும் இத்தடுப்பூசி ஏற்றப்பட்ட மூன்று நாட்களின் பின் காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் அங்கிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபின் இறந்தார்.

1500 ரூபா

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கும் இந்த கொடுப்பனவுகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நாம் செய்ய முடிந்ததையே சொன்னோம். சொன்னதைச் செய்து முடிப்போம் என சந்திரிகா மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க

வெடுக்க காரணமாக அமைந்ததாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியின் இந் நிலை அவரின் அரசியல் பக்குவப்படாத தன்மையை காட்டுவதாகவும் இந்த நிலை பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஜனாதிபதி போட்ட முதல் முட்டுக்கட்டையாக கருத முடியும் என கருதப்படுகின்றது.

தனது சொந்த விருப்பின் நிமித்தமே ஜனாதிபதி பாராளுமன்ற ஆரம்பக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவினை எடுத்தார் என ஐ.தே. கட்சி வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

ஐ தே. கட்சியின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைகளை எவ்வாறு வாசிப்பது என்ற சங்கடமான நிலையிலேயே மேற்படி முடிவை எடுத்தார் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

முதல்

அரசியல் அமைப்பு விதிக

சந்திரிகாவின் மன ஊசல் என்ற தலைப்பில் அவர் எழுதிய செய்திக் குறிப்பில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சந்திரிகாவிடம் இனவாத சாயல் இல்லை. தமிழர் பிரச்சினையை தீர்க்கும் ஆற்றல் அவரிடமுண்டு. மறைந்த அவரின் கணவர் விஜயகுமாரணதுங்க போர் தொடங்கிய பின்பு கூட யாழ்ப்பாணம் சென்றுவந்த சில சிங்கள அரசியல் வாதிகளில் ஒருவர்-அவரும் சந்திரிகாவும் 1980 களில் தென்னிந்தியாவில் தமிழ் பிரிவினைவாத தலைவர்களை சந்தித்தனர்.

பி பி. ஸிக்கு சந்திரிகா அளித்த பேட்டியில் சிங்களவர்களில் அநேகமானோர் இனவாதிகளல்ல என்று கூறியிருக்கிறார். ஒரு அரசியல் கட்சி முயன்றால் தீர்வு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் அவர் கூறினார்.

பல்கலைக் கழக

சாலை கல்வி முறையிலும் முறையானமாற்றம் கொண்டு வரப்படும். அடுத்த ஆண்டிலிருந்து பல்கலைக் கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவோர் தொகை படிப்படியாக அதிகரிக்கப்படும். பல்கலைக்கழக நிர்வாகம் சுதந்திரமாக செயற்பட வழி செய்யப்படும் போதனாசிரியர்கள் இல்லாத பல்கலைக் கழக ஊழியரின் பல்வேறு பிரச்சினைகள் துரிதமாக தீர்த்து வைக்கப்படும்.

அரசியல்தீர்வு

தெரிவிக்கமாட்டோம்.

அது வடக்கு-கிழக்கு மாவட்டத்திற்கென மட்டுப்படுத்தப்படும். அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பாதுகாப்பு படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளஇளைஞர்களில் போதிய சாட்சியங்கள் உள்ளவர்கள் மீது வழக்குத் தொடரப்படும். ஏனையோர் விடுதலை செய்யப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். ஸ்ரீதர்.
அகலத்திரையில்

அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க

தினசரி காலை 10-30 மணிக்கு மட்டும்

அறியத்தருகின்றோம்.

அ) இலக்கியப் போட்டிகள்
ஆ) சிறந்த சனசமூக நிலையம்
இ) சிறந்த பாலர் பாடசாலை
ஈ) சிறந்த பாலர் பாடசாலை ஆசிரியை
உ) ஓவியம் வரையும் போட்டி
ஊ) பாடசாலை மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகை
எ) சிறந்த சனசமூக நிலைய சமாஜம்.

எம்மோடு தொடர்பு கொள்வோர் மட்டுமே இப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென்பதனை அறியத் தருகின்றோம்.

உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்.
94-08-22

**சுந்தரம் டிவகலாலா**
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் / கிளிநொச்சி மாவட்டங்கள். இணைப்பாளர், கண்காட்சிக் குழுக்களின் சார்பில்.

விளம்பர அன்பளிப்பு:-
**யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்,**
183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(சி-10168)

## தியாகி திலீபன்
## 7ஆம் ஆண்டு நினைவு தின
### கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்

தமிழீழ மாணவர்களே!
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
மகளிர் பிரிவினர்
அளிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
உங்கள் படைப்பாற்றலைக் காட்டிப் பெறுமதிமிக்க பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்று மகிழுங்கள்!
போட்டி விதிமுறைகள்:-
போட்டி முடிவுத் திகதி:- **10 - 09 - 1994**

**விடுதலைப் புலிகள்**
**மாணவர் அமைப்பு (மகளிர்)**
(சி-10169)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

(9193) (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

# யாழ் றோட்டறிக் கழகம்

**21.08.94 அன்று நடாத்திய**
**4-வது கண் சத்திர சிகிச்சை முகாமுக்கு**
**[CATARACT SURGERY CAMP-4]**

உதவி நல்கிய யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள், கோப்பாய் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கும் இந்த 4-வது முகாமுக்கு நோயாளர்களைத் தெரிவு செய்வதற்கு உதவி நல்கிய இணுவில் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர், ஊழியர்களுக்கும், எங்களை ஊக்குவித்து உதவிய யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் அவர்கட்கும், திறம்பட நடாத்தி முடிக்க ஆதரவு வழங்கிய



**S·M·FERNANDO**

ஸ்தாபனத்தாருக்கும்
யாழ். றோட்டறி கழகம் நன்றி தெரிவிக்கின்றது.

சமூகசேவை இயக்குனர்
யாழ். றோட்டறிக் கழகம்.
24-8-94 (9190)

தாயபூர்வமாக கலந்துகொள்ளவோ, ஆரம்ப உரையை நிகழ்த்தவோ மாட்டார் என ஜனாதிபதிச் செயலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக 'ராய்ட்டர்' செய்தி வெளியிட்டுள்ளது.

### வடமராட்சி
யிலும் மற்றும் சற்கோட்டை, இன்பருட்டி கடற்பகுதிகள் மீதும் சடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இரண்டு கடற்படைப் படகுகளில்இருந்தும் தொடர்ந்து தாக்குதல் நடந்தன. இடையிடையே கலிபர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதலையடுத்து மக்கள் மத்தியில் பீதி நிலை தென்பட்டது. எனினும் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

இக் கடற்பகுதிக்கு வந்த இரண்டு படகுகளில் ஒருபடகு காலை 10.30 மணிவரை கடலில் தரித்து நின்று நோட்டமிட்டு விட்டு விலகிச் சென்றது. இதனை யடுத்து மீனவர்களும் ஒருவாறு கரையை வந்து சேர்ந்தனர். (யோ)

### முதல்
அரசியல் அமைப்பு விதிகளுக்கு அமைவாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் கட்சி ஒன்றின் கொள்கை விளக்க உரையை வாசிப்பது ஜனாதிபதியின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும், இதனை அவர் ஆரம்ப கூட்டத்தொடரில் வாசிக்காது விடினும் வேறொர் கூட்டத்தொடரில் வாசித்தே ஆகவேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்:

டி.பி. விஜேதுங்கா தான் தோல்வியடைந்த கட்சியின் தலைவர் என்ற வகையில் செயலாற்றுவதைத் தவிர்த்து நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் செயலாற்ற வேண்டும் எனவும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### எயிட்ஸ்
எயிட்ஸ் நோய் ஆட்கொண்டிருக்கும் என மொறாக்கோவிலுள்ள மறாக்கேஷ் என்னுமிடத்தில் நடைபெற்ற எயிட்ஸ் நோய் பற்றிய சர்வதேச மகாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினசரி காலை 10-30 மணிக்கு மட்டும்

**'மண்ணுக்காக'**

தினசரி மாலை 4-00 மணி 6-00 மணி காட்சிகளாக

**CHUCK NORRIS** நடித்த
**BRAD-DOCK**
**MISSING IN ACTION - III**
(தாக்குதல் சித்திரம்)

ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில்
பி. ப. 2-00 மணிக்கு மட்டும்

**''ஒளி வீச்சு''**
யூன் - 94
காண்பிக்கப்படும்.
(சி-10131)

## திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான பவ வருடம் ஆவணி மாதம் 8-ம் நாள் (24-08-94) புதன்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் 12-30 வரையுள்ள சுபவேளையில்

| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| --- | --- |
| **ரட்ணராஜா (ராஜன்)** | **யோகேஸ்வரி (லலிதா)** |

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதமாய் வருகைதந்து மணமக்களை வாழ்த்தியேகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.
(இரு வீட்டார் அழைப்பு)

திரு திருமதி சின்னத்துரை குஞ்சம்மா
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

திரு. திருமதி சின்னக்கிளி அன்னப்பிள்ளை
செல்வநகர் நாவற்குழி.

(9194)